egistered as a NewsPaper

விலை: ரூபா 7.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள் – 8

நாதம் 15 | திருவள்ளுவர் ஆண்டு 2035 | சித்திரை–10 | 22–04–2004 | வியாழக்கிழமை | ஓசை – 64




# 13 வது பாராளு. சபாநாயகர் இன்று தெரிவு;

# கொழும்பில் அரசியல் இழுபறி நிலை நீடிப்பு

## ஐ.ம.சு.முன்னணிக்குள் முரண்பாடு ஹெலஉறுமயவின் ஆதரவில் சந்தேகம்

(கொழும்பு)

**சிறிலங்காவின் 13வது பாராளுமன்றக் கூட்டத் தொடர் இன்று ஆரம்பமாகவுள்ள நிலையிலும், புதிய சபாநாயகர் தெரிவு செய்யப்பட வுள்ள வேளையிலும் கொழும்பில் அரசியல் நிலை தொடர்ந்தும் இழுபறியுடன் கூடியதாகவே இருப்பதாகவும், புதிய அரசாங்கத்தைப் பொறுப்பேற்றுள்ள ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி நெருக்கடியைச் சந்தித்து வருவதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.**

ஐ.ம.சு. முன்னணி புதிய அரசாங்கத்தை அமைக்க முன்வந்துள்ள போதும், அக்கூட்டணிக்கு பாராளுமன் றத்தில் அறுதிப் பெரும்பான்மையைத் திரட்ட முடியாத நிலையே காணப்படுவதாகவும், இதன் காரணமாக இன்று கூடவுள்ள 13வது பாராளுமன்றத்தில் சிறுபான்மை அரசாங்கமாகவே அதனால் இருக்க முடியும் எனவும் தெரிய வருகின்றது.

இதேவேளை, ஐ.ம.சு. முன்னணியில் இடம் பெற்றுள்ள சுதந்திரக்கட்சிக்கும் - ஜே.வி.பி.க்கும் இடை யில் அமைச்சுக்கள் ஒதுக்கீடு தொடர்பாக எழுந்துள்ள நெருக்கடி நீடிப்பதாகவும், மகாவலி அமைச்சை ஜே.வி.பி.க்கு ஒதுக்க சனாதிபதி சந்திரிகா தயாராக இல்லாத நிலையில், ஜே.வி.பி. அமைச்சரவையில் பங்கேற்கும் நிலையில் இல்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது. இதனை யடுத்து அமைச்சுப் பொறுப்புக்கள் எதையும் ஏற்காத நிலையில் ஜே.வி.பி. பாராளுமன்றக் கூட்டத் தொடரில் பங்கேற்கவுள்ளதாகவும் அறிய வருகின்றது.

இதேவேளை, ஜாதிக ஹெல உறுமய கட்சியின் இரண்டு பாராளுமன்ற உறுப்பினர்கள் கடத்தப்பட் டமையானது புதிய நெருக்கடி (8ஆம் பக்கம் பார்க்க)

## ஜா.ஹெ.உ.இன் பா.உறுப்பினர் இருவரின் இராஜினாமா குறித்து சர்ச்சை

(கொழும்பு)

ஜாதிக ஹெலஉறுமயவைச் சேர்ந்த இருபாராளுமன்ற உறுப்பினர் களின் இராஜினாமா தொடர்பாக பாராளுமன்ற அதிகாரிகள் பெரும் சிக்கல் நிலைக்கு ஆளாகியுள்ளார்கள்.

இவர்களின் இராஜினாமாவுடன் வேறொருகட்சிக்கு மறைமுகமான தொடர்பு இருப்பதாக கட்சிகுற்றம் சாட்டி யுள்ளது. இவர்களின் இராஜினாமாக் கடிதம் பாராளுமன்ற செயலர் பிரி யானி விஜயசேகராவினால் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.

எனினும் இவர்கள் பின்னர் தாம் இராஜினாமக் கடிதம் வழங்கவில்லை எனத் தெரிவித்துள்ளனர்.

இவர்களில் வணகடலுவே ரத்னசிறிதேரர் கொழும்பு மாவட் டத்தில் இருந்து 10,512 விருப்பு வாக்குகளால் தெரிவாகியதுடன் மற்ற வரான வண அப[illegible]க்க பஞ்ஞாநந்த தேரர் 7389 விருப்பு வாக்குகளால் கம் பகா மாவட்டத்தி[illegible]ருந்தும் தெரிவாகி யுள்ளனர். இவர் தேர்தலுக்கான வேட்பு மனுவைத் தாக்கல் செய்து பின்னர் இராஜினாமாவைச் செய்தவர் எனக் கூறப்படுகிறது. ஆயி னும் அவர் விருப்பு வாக்குகளால் வெற்றி

(8ஆம் பக்கம் பார்க்க)

## ஐ.ம.சு.முன்னணிக்கு ஆதரவளிக்கும் தீர்மானத்தை ஜா.ஹெலஉறுமய மீளாய்வு

(கொழும்பு)

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் முற்போக்கான நடவடிக்கைகளுக்கு ஆதரவளிப்பது என்ற தமது முன்னைய தீர்மானத்தை மீளாய்வு செய்யப் போவதாக ஜாதிக ஹெல உறுமய அறிவித்துள்ளது. கம்பஹா மாவட்டத்தில் தமது கட்சியின் சார்பில் தேர்தலில் வெற்றி பெற்ற அப்பரதேஹ புன்னியாநந்த தேரரை ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியினர் மறைத்து வைத்திருப்பதாக குற்றம் சுமத்தியே இந்த அறிவிப்பை (8ஆம் பக்கம் பார்க்க)

## "மே" மாதம் முடியும் வரை கடும் வெப்பம் குறையாது

### –காலநிலை அவதான நிலையம் அறிவிப்பு

(கொழும்பு)

"மே" மாதம் முடியும் வரை தற்பொழுது நாட்டில் நிலவி வரும்கடும் வெப்பம் குறையாது என சிறிலங்காவின் காலநிலை அவதான நிலையம் அறிவித்துள்ளது. சூரியன் இலங்கையின் நடுமையத்தில் இருப்பதால் மழை, காற்று, இல்லாமல் இருக்கும் என காலநிலை அவதான நிலையம் மேலும் அறிவித்துள்ளது.

## சபாநாயகர் பதவி ஹெல உறுமயவிற்கு வழங்க முன்[illegible]ரின் அதை ஆராய்வோம்

### ஜா. ஹெ. உறுமயவின் பேச்சாளர்

(கொழும்பு)

தற்போதைய அரசும் எதிர்கட்சியும் ஒரு புதிய சபாநாயகரை தெரிவு செய்வதற்கு முடியாது போனால் அப்பதவியை ஹெல உறுமய கட்சிக்கு வழங்குவதற்கு முன்வந்தால் அப்பதவியை ஏற்பது சம்பந்தமாக நாங்கள் ஆராய்வோம் என அக்கட்சியின் அரசியல் பேச்சாளர் அத்துரலிய ரத்தின தேரர் கூறியுள்ளார். நாட்டையும், நாட்டு மக்களையும் காப்பாற்றுவதே எமது கட்சியின் கடமையாகும் இம்முறை பாராளுமன்றத்திற்கு தெரிவாகும் சபாநாயகருக்கு பாரிய பொறுப்புக்கள் உள்ளதென்றும் அரசியல் யாப்பை மாற்றுவதா இல்லையா என்பது சம்பந்த (8 – ஆம் பக்கம் பார்க்க)

## தொடர்ந்தும் ஐ.தே.கட்சிக்கே ஆதரவு; இலங்கை தொழிலாளர் காங்கிரஸ்

(கொழும்பு)

இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் ஐக்கிய தேசியக் கட்சிக்கே தொடர்ந்தும் ஆதரவு வழங்கும் என முடிவெடுத்துள்ளது. நேற்று இரவு கூடிய அக்கட்சியின் உயர் மட்டக்குழு இது தொடர்பான முடிவை எடுத் துள்ளது. இதன்போது சனாதிபதி அரசியல் அமைப்பை மாற்றும் யோசனை யில் இருப்பதால் அது தமிழ மக்களுக்கு விரோதமாகவே அமையும் எனத் தெரி வித்துள்ள அக்கட்சி தொடர்ந்தும் ஐ.தே.கட்சிக்கே ஆதரவு வழங்குவதாகத் தெரிவித்துள்ளது. இதேவேளை, இன்று நடைபெறவுள்ள சபாநாயகர் தெரிவிலும் ஐ.தே.க.வுக்கே ஆதரவு வழங்குவதாக முடிவு செய்துள்ளது.

## கட்சி உறுப்பினர்கள் விலகவுள்ளதான செய்திகளில் உண்மையில்லை

### ரணில் விக்கிரமசிங்க

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர் கள் கட்சியை விட்டு விலகவுள்ள தாக வெளிவந்த செய்திகளில் எது வித உண்மையும் இல்லை என்று கட்சியின் தலைவர் ரணில் விக்கிரம சிங்க தெரிவித்துள்ளார்.

கட்சி உறுப்பினர்கள் மீது தமக்கு பூரண நம்பிக்கை இருப்பதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். இன்று நடைபெற்ற ஐக்கிய தேசியக் கட்சி யின் பாராளுமன்ற குழுக்கூட்டத்தில் உரையாற்றிய வேளையில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார். சபா நாயகர் பதவிக்கு முன்னாள் அமைச் சர் டபிள்யு.ஜே.எம்.லொக்குபண்டார வின் பெயரை முன்மொழிவது என்று ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது. லொக்குபண்டாரவின் வெற்றிக்காக கட்சியின் சகல உறுப்பினர்களும், ஒன்றிணைந்து பூரண ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்று ஐ.தே.க. கட்சியின் தலைவர் ரணில் விக்கிரம சிங்க கேட்டுக்கொண்டார். கடந்த காலங் களில், ஐக்கிய தேசியக் கட்சிக்காக அர்ப்பணிப்புடன் செயற்பட்டமை குறித்து பாராளுமன்ற உறுப்பினர் களுக்கு தமது நன்றியையும் தெரிவித்திருந்தார்

## பிரதிப்பாதுகாப்பு அமைச்சர் பதவிக்கு ரத்வத்துவின் பெயர் முன்னிலையில்

(கொழும்பு)

தற்போதைய ஐ.ம.சு முன்னணி அரசின்பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் பதவிக்கு அனுருத்த ரத்வத்தவின் பெயர் முன்னுரிமைப்படுத்தப்பட்டுள் ளது. தேசிய பட்டியலில் முதலில் இவருக்கு இடம் அளிப்பதன் மூலம் இப்பதவியை வழங்கலாம் என கட்சி தீர்மானித்துள்ளது.

பொதுத் தேர்தலுக்கு முன்பு ரத் வத்தவுக்கு தேசியப்பட்டியலில் இட மளிக்கப்படமாட்டாது என சந்திரிகா தெரிவித்திருப்பினும் தற்போது கிழக்கு பிரதேசத்தில் கருணா குழுவினருக் கும் வன்னித் தலைமைக்கும் இடை யில் ஏற்பட்டுள்ள பிணக்குகளில் இராணுவத்தின் உற்சாகமற்ற நிலை காணப்பட்டதையடுத்து அனுரத்தவை பிரதிபாதுகாப்பு அமைச்சராக நியமிக்கும் யோசனை தெரிவிக்கப்பட்டுள்ளது. அத்துடன் ஜனாதிபதியின் தேவை யறிந்து செயற்படும் நம்பிக்கை வாய்ந் தவர் ரத்வத்த என்பதால் அவருக்கு நியமனம் வழங்கப்படலாம்.

கிழக்கில் கருணா குழுவினருக்கும் பிரபாவின் படையினருக்கும் மோதல் நடைபெற்றவேளை பாதுகாப்புச் செய லர் சிறில் ஹேரத்தின் பணிப்பின் பேரில் கிழக்கின் இராணுவ அதிகாரி ஒருவர் முப்படைகளையும் பொலிஸ்மா அதிபரையும் சந்தித்தார். சனாதி பதியிடம் முப்படை தலைமைப் பொறுப்பு இருப்பினும் இராணுவத்தை வழி நடத்தும் தேவைகளையறியும் திறன் அவரிடம் இல்லை. ஆகவே இது

(8ஆம் பக்கம் பார்க்க)

## முல்லை.மாவட்ட அரசியல்துறை செயலகம் நேற்று புதுக்குடியிருப்பில் திறந்துவைப்பு

### அரசியல்துறைப்பொறுப்பாளர் கலந்து கொண்டு சிறப்பிப்பு

(புதுக்குடியிருப்பு)

முல்லை மாவட்ட அரசியல்துறைச் செயலகம் நேற்றுக்காலை புதுக்குடியிருப்பில் சம்பிரதாய பூர்வமாக திறந்து வைக்கப்பட்டது. வேதவனம் தலைமை யில் இடம் பெற்ற இச்செயலகத்தின் திறப்புவிழாவில் தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் சிறப்புரை ஆற்றினார்.

ஆரம்பநிகழ்வாக பொதுச்சுடரை கிராமசேவையாளர் செ.தர்மராசா, பிரம்மசிறி குமாரசாமிக்குருக்கள், கரும்புலி மேஜர் இலக்கியனின் தாயார் ஆகியோர் ஏற்றிவைக்க தமிழீழதேசியக் கொடியை தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனப்பொறுப்பாளர் மதன்ராஜ் ஏற்றிவைத்தார். அகவணக்கத்தைத் தொடர்ந்து பெயர்பலகையை தமிழீழ மருத்துவப்பிரிவுப் பொறுப்பாளர் [illegible] அவர்கள் திரை நீக்கம் செய்துவைத்தார். தொடர்ந்து மாவட்ட தேசிய எழுச்சிப்பேரவையின் பணி மனையை தமிழீழதேசிய எழு சிப் பேரவையின் பொறுப் (8ஆம் பக்கம் பார்க்

## வரி விளம்பரம்

### புவியியல் வகுப்புக்கள

2006ம் ஆண்டு கலைப்பிரிவு மாணவர்களுக்கான புவியியல் வகுப்புக்கள். வெண்ணிலா கல்வி நிலையம் மல்லாவி. ஐடியல் கல்வி நிலையம் பாலிநகர். புதிய கலைக் கல்லூரி பாண்டியன்குளம். சனி, ஞாயிறு தினங்களில் வகுப்புக்கள் நடைபெறுகிறது. எஸ்.ஜெயரஞ்சன் (B.A.Hons) (சி-9378)

### தவறி விட்டது

சிவகுமார் ஜெகதீஸ்வரிஆகிய எனது தாலிக்கொடி புளியம் பொக்கனை நாகதம்பிரான் ஆலய பொங்கல் விழா,நடந்த அன்றைய தினம் தவறிவிட்டது கண்டெடுத்தவர்கள் ஈழநாதம் பணிமனைகளில் அல்லது சூரசங்காரம் அரசடி பிள்ளையார் கோவில் வீதி 46 வட்டாரம் புளியம்பொக்கணையில் ஒப்படைக்கவும் சன்மானம் வழங்கப்படும். (4079)

### ஆரம்பமாகிறது

கேம்பிறிச் கல்லூரி பேருந்து நிலைய வீதி கிளிநொச்சியில் 2004.04.21 புதன் மாலை 4.00 மணிக்கு ஆரம்பம். நிர்வாகி. S.தவரூபன் (4451)

### அமுதன் கல்வி நிலையம் புதுக்குடியிருப்பு

A/L வரலாறு 2005,2006ம் ஆண்டிற்கானது 23ம் திகதி மாலை 3.00 மணிக்கு ஆரம்பமாகிறது ஆசிரியர்-ஆனந்தன். (4080)

### தவறி விட்டது

த. பரசிவம் ஆகிய எனது (Cash Line Card) காசு லைன் காட், பணமும் உள்ளடக்கிய பேஸ் கரடிப்போக்குச் சந்தியில் இருந்து ஈழநாதம் கிளிநொச்சிக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் ஈழநாதம் பணிமனையில் ஒப்படைக்கவும். (பணம் பிரதானமில்லை) (4455)

# 5மா.சபைகளின் ஆட்சிக்காலம் "மே" ஆறாம் திகதியுடன் முடிவு

(கொழும்பு)

**ஐந்து மாகாண சபைகளின் ஆட்சிக்காலம் வரும் மேமாதம் ஆறாம் திகதியுடன் முடிவடைவதோடு சப்பிரகமுவ மற்றும் மத்திய மாகாணங்களின் ஆட்சிக்காலம் வரும் வெள்ளிக்கிழமையுடன் முடிவடைகின்றது.**

இந்த மாதம் 26 ஆம் திகதி ஊவா மாகாணசபையின் ஆட்சிக்காலம் நிறைவெய்துகின்றது. வடமத்திய மாகாணம் மேல் மாகாணம் ஆகிய வற்றின் உத்தியோகபூர்வ ஆட்சிக்காலம் வரும் மாதம் ஆறாம் தேதியுடன் முடிவடைகின்றது. இது இவ் வாறிருக்க வரும் சனிக்கிழமை வடமேல் மாகாண சபைத்தேர்தல் நடைபெறுகின்றது

நீதியானதும் சுதந்திரமானதுமான மாகாணசபைத் தேர்தல் ஒன்றை வடமேல் மாகாணத்தில் நடத்தும் நோக்குடன் கடுமையான பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் ஜயசிங்க கேரத் தெரிவித்துள்ளார்.

இதேவேளை தேர்தலுக்கான சகல நடவடிக்கைகளும் பூர்த்தியடைந்துள்ளதாக தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸநாயக்க தெரிவித்துள்ளார்.

# நாய்க்கடிக்குள்ளாவோர் மாதாந்தம் அதிகரிப்பு

### -திலீபன் மருத்துவக்கோவை புள்ளிவிபரம் தெரிவிப்பு

(அலுவலகசெய்தியாளர்)

கடந்த மூன்று மாதங்களில் தியாக.தீபம் திலீபன் மருத்துவசேவையினரால் மேற்கொள்ளப்பட்ட நாய்கடி சம்பந்தமான ஆய்வின்போது கிடைக்கபபெற்ற புள்ளிவிபரங்களின்படி

தை மாதத்தில் மட்டும் 36பேர்கள் நாய்க்கடிக்கிலக்காகியுள்ளனர் இதில் கூடுதலாக நாய்கடிக்கு உள்ளான கிராமம் பூநகரி (13பேர்) மாசிமாதத்தில் மொத்தமாக 68பேர் நாய்க்கடிக்கிலக்காகியுள்னர் இதில் கூடுதலாக நாய்க்கடிக்கு உள்ளான கிராமம் ஆழியவளை (30பேர்) பங்குனி மாதத்தில் தை, மாசி மாதத்தை விட அதிகூடிய தொகையை காட்டியுள்ளது. மொத்தமாக 107பேர்கள் நாய்கடிக்கிலக் காகியுள்ளனர். பங்குனி மாதத்தில் மட்டும் ஆழியவளை கிராமத்தில் 64பேர் நாய்கடிக்கு உள்ளாகியுள்ளனர். இவ்வாறான நிலையில் இருந்து பாதுகாப்புப்பெற மருத்துவசேவையினர் கூறும் அறிவுரைகளை கருத்தில்க் கொண்டு மக்களை விழிப்புணர்வுடன் இருக்குமாறு வேண்டிக்கொள்கின்றனர். (தீ)

# கரைதுரைப்பற்றுப் பிரதேசத்தில் கட்டாக்காலி நாய் ஒழிப்பு

கரைதுரைப்பற்றுப் பிரதேசத்தில் கட்டாக்காலி நாய்யொழிப்பு எதிர்வரும் 29 ஆம் திகதி நடைபெற உள்ளது.

முதற்கட்டமாக 26.27.28, திகதிகளில் கட்டாக்காலி நாய் அழிப்பதன் மூலம் நீர்வெறுப்புகளை நோயை அகற்றுவது தொடர்பாகவும் வளர்ப்பு நாய்களுக்கு தடுப்பூசி போடுவது தொடர்பான கருத்தூட்டலும் இடம்பெறும்.

இந்தக்காலப்பகுதியில் கரைதுரைப்பற்றுப்பிரதேச சபையிலும் முள்ளியவளை பிரதேசசபையிலும் வைத்து தடுப்பூசி ஏற்றப்படும்.

விழிப்புணர்வு நாட்களில் கட்டாக்காலி நாய்கள் அதிகமாக நிற்கும் இடங்களிலும் வீட்டில் தேவையற்ற குட்டி நாய்கள் இருந்தாலும் எமக்குத் தெரியப்படுத்தும் பட்சத்தில் பிரதேச சபையால் அழிக்கப்படும் எனவும் முள்ளியவளைப்பிரதேசத்திலும் முல்லைத்தீவு நகரப்பகுதியிலுமே முதற்கட்டமாக கட்டாகாழி நாயொழிப்பு நடைபெறும் தொடர்ந்து ஏனைய பிரதேசத்திலும் நடைபெறும் கரைதுரைப்பற்று பிரதேசசபைப் செயலாளர் திரு.இ.கிருஷ்ணபிள்ளை தெரிவித்தார். (20)

# நாட்டில் மீண்டும் யுத்தம் ஏற்பட அரசியல் தலைமைகள் அனுமதிக்கக் கூடாது

### யாழ்.பல் கலைக்கழக வேந்தர் வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

நாட்டில் மீண்டும் ஒருயுத்தம் ஏற்படுவதற்கு அரசியல் தலைமைகளும் அரசாங்கமும் ஒருபோதும் அனுமதிக்கக்கூடாது என யாழ்.பல் கலைக்கழகத்தின் வேந்தர் எம். சிவசூரியா வேண்டுகோள் விடுத்துள்ளார்

யாழ்.விஞ்ஞான சங்கத்தின் 12வது ஆண்டுவிழா நேற்று யாழ்-பல்கலைகழக கேட்போர் கூடத்தில் இடம் பெற்றது . இந்நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர்இதனைத் தெரிவித்துள்ளார்.

யாழ்.பல்கலைகழகத்தின் விஞ்ஞான பீடாதிபதி பேராசிரியர் இ.குமாரவடிவேல் தலைமையால் இடம் பெற்ற இந்நிகழ்வில் யாழ்.பல்கலைகழக துணை வேந்தர்.சு.மோகனதாஸ் உட்பட சகல பீடங்களின் பீடாதிபதிகள் பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள் என பலரும் கலந்து கொண்ட இந்நிகழ்வில் தொடர்ந்தும் உரையாற்றிய அவர்.

கடந்த 20 ஆண்டு கால யுத்தத்தினால் வடக்கு-கிழக்குப் பகுதி வாழ் தமிழ் மக்களது வாழ்வியல் அடிப்படைக் கட்டுமானங்கள் இராணுவ ஆக்கிரமிப்புச் செயற்பாடுகளால் சீர்குலைக்கப்பட்டுள்ளது. இந்தச் சீர்குலைவுகளை நிவர்த்தி செய்து மக்களை மீளக்குடியமர்த்துவதற்கும், இயல்புவாழ்வை ஏற்படுத்தவும் உரியவர்கள் முன்வரவில்லை- இதனால் அடிப்படை வசதிகள் அற்ற அகதிவாழ்வுகள் தொடர்கின்றன.

இதனால் மீண்டும் ஒருயுத்தம் ஏற்பட்டு உயிரழிவுகளை உருவாக்க அரசியல் தலைமைகள். இடமளிக்கக்கூடாது கடந்த காலயுத்தத்தால் பாதிக்கப்பட்ட வடக்கு கிழக்கு பகுதிகளை மீளக்கட்டியெழுப்பும் விதமாக புலிகளுடனான சமாதானப் பேச்சுக்களை புதிய அரசாங்கமும் நீதியான முறையில் முன்னெடுக்க வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தினார். (33)

# ஐ.தே.முன்னணி தொ.சங்கத்தினர் மீது ஐ.ம.சு. முன்னணி தொ.ச.வாதிகள் தாக்கு

(கொழும்பு)

சிங்கள,தமிழ்,புத்தாண்டு தினத்தை கொண்டாடுவதற்காக வீடுகளுக்கு சென்று மீண்டும் அநுராதபுரம் போக்குவரத்து சபைக்கு வேலைக்கு திரும்பிய.ஐக்கிய தேசிய கட்சியின் தொழில் சங்க உறுப்பினர்கள் ஐக்கிய சுதந்திர முன்னணி தொழிற்சங்க அங்கத்தவர்களால் அடித்து விரட்டப்பட்டுள்ளனர்.

இது சம்பந்தமாக அநுராதபுரம் பொலிஸ் நிலையத்திற்கு முறைப்பாட்டை இந்த தொழிற்சங்க ஊழியர்கள் செய்துள்ளனர். இது சம்பந்தமாக பொலிசார் துரித நடவடிக்கைகள் மேற்கொண்டுள்ளனர்.

# வடமேல் மா.சபை தேர்தல் பிரச்சாரம் நள்ளிரவுடன் முடிந்தது

(கொழும்பு)

வடமேல் மாகாண சபை தேர்தல் பிரசார நடவடிக்கைகள் நள்ளிரவுடன் முடிவடைகின்றது.நள்ளிரவு 12 மணிக்கு பின்னர் எந்தவித தேர்தல் பிரசார நடவடிக்கைகளிலும் ஈடுபடுவது முற்றாக தடைசெய்யப்பட்டுள்ளதாக தேர்தல் செயலகம் அறிவித்துள்ளது.வடமேல் மாகாண சபைக்கான தேர்தல் நாளை மறுதினம் நடைபெறவுள்ளது. 50 உறுப்பினர்களை தெரிவு செய்வதற்காக இம்முறை நடைபெறும் தேர்தலில் 12 அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளும் ஏழு சுயேட்சைக்குழுக்களும் போட்டியிடுகின்றன.

# கிளி. தொழில்நுட்பக் கல்லூரியில் புதிய கற்கை நெறிகள் ஆரம்பம்.

(அலுவலகசெய்தியாளர்)

லண்டன் T.R.TELH- நிறுவனத்தின் ஆதரவுடன் கிளிநொச்சியில் இயங்கிவரும் தொழில் நுட்பக்கல்லூரி,மாணவர்களின் நன்மை கருதி தேசிய சான்றிதழுக்கான புதிய கற்கை நெறி ஒன்றினை அடுத்தமாத முற்பகுதியில் ஆரம்பிக்க இருக்கின்றது. புதிய கற்கை நெறியாக ஆங்கில பாடத்தினை ஆரம்பிக்க உள்ளது. அத்துடன் இந்த தொழில் நுட்பக்கல்லூரி யின் கிளை ஒன்றும் நேற்று 2.30-மணியளவில் பளை பிரதேசத்திலே.பிரதேச சபைக்கு முன்பாக திறந்து வைக்கப்பட்டுள்ளது.

அங்கு கணனி பயிற்சி நெறி.மற்றும் மேசன் பயிற்சி நெறி. என்பவையும் ஆரம்பித்து தேசிய சான்றிதல் வழங்கும் கற்கை முறையாக இது உள்வாங்கப்பட்டுள்ளது இக்கல்லூரி மாணவர்களுக்கு இலவச கற்கை நெறிகளை வழங்கி தேசிய சான்றிதலையும் வழங்கவுள்ளது என்று கிளிநொச்சி தொழில் நுட்பகல்லூரி நிறுவனம் அறி யத்தந்துள்ளது. (கு)

# தீவக.பகுதிகளில் படையினரின் பாதுகாப்பு கெடுபிடிகள் அதிகரிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.தீவகப்பகுதிகளான புங்குடுதீவு. வேலணை மண்கும்பான் ஆகிய பகுதிகளில் படையினர் நேற்றுமுதல் தமது பாதுகாப்பு கெடுபிடிகளை அதிகரித்திருப்பதாக தெரியவருகிறது.

திடீரென ஆரம்பிக்கப்பட்டுள்ள இந் நடவடிக்கைகளின் போது இராணுவத்தினர் தமது நிலைகளைப் பலப்படுத்தி வருவதுடன் வீதிகளிலும் படையினர் தமது ரோந்துகள், பாதுகாப்புக்கடமைகள் என்பவற்றை ஆரம்பித்திருப்பதுடன் திடீர் திடீரென வீதித்தடைகளைப் போட்டு மக்கள் மீதான சோதனைக் கெடுபிடிகளையும் ஆரம்பித்துள்ளனர்.

இதனால் இப்பகுதிமக்களிடையே பெரும் பீதியும் பரபரப்பும் ஏற்பட்டுள்ளது. யுத்தநிறுத்தக் காலத்திலும் படையினர் இவ்வாறு நடந்து கொள்வது குறித்தும் அப்பகுதி மக்கள் ஆட்சேபம் தெரிவித்துள்ளது. (33)

# நினைவுக்கல் திரை நீக்கம்

கடந்த 5.10.2000 ஆம் ஆண்டு நாகர் கோயில் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான மோதலின் போது வீரச்சாவைத்தழுவிக்கொண்ட வீரவேங்கை விழிக்கதிர் இரத்தினசிங்கம் மலர்விழி பிரான்பற்று பண்டத்தரிப்பு என்னும் மாவீரரது நினைவுக்கல் கோப்பாய் மாவீரர் துயிலுமில்லத்தில் நேற்று முன்தினம் திரைநீக்கம் செய்து வைக்கப்பட்டது.

இம்மாவீரரது திருவுருவப்படம் கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லம் மண்டபத்தில் நேற்று முன்தினம் வைக்கப்பட்டுபின்னர் பிற்பகல் 4.30 மணியளவில் கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லத்திற்கு கொண்டு செல்லப்பட்டு திரு.க.கண்ணன் தலைமையில் வீரவணக்கக்கூட்டம் நடைபெற்றது.

முதலில் ஈகச்சுடரினை மாவீரரின் தந்தை இரத்தினசிங்கம் ஏற்றி வைத்தார். மலர் மாலையினை அவரது சகோதரன் அணிவித்தார். நினைவுரையினை யாழ்.மாவட்ட அரசியல்துறை நிர்வாகப் பொறுப்பாளர் திரு. யாழவன் ஆற்றினார். பின்னர் 5.30 மணியளவில் மாவீரரது தந்தை திரு.இரத்தினசிங்கம் அவர்கள் நினைவுக்கல்லினை திரைநீக்கம் செய்து வைத்தார். இதில் பொதுமக்களும் போராளிகளும் கலந்து கொண்டன.

# பொலிசார் ஒருவர் தற்கொலை முயற்சி

வவுனியா பொலிஸ் நிலையத்தில் பணியாற்றி வந்த பொலிசார் ஒருவர் தனக்குத்தானே துப்பாக்கியால் சுட்டுக் கொண்ட சம்பவம் நேற்று முன்தினம் இரவு வவுனியா பொலிஸ் நிலைய காவலரணில் நடைபெற்றது. சம்பவத்தில் படுகாயமடைந்த வெரகொட என்ற பொலிசார் மருத்துவமனையில் அனுமத்திக்கப்பட்டுள்ளார். காவல் கடமையில் இருந்த போது இவர் தனக்குத்தானே சுட்டுக் கொண்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# சந்திப்பு

(கொழும்பு)

இலங்கையில் உள்ள அனைத்து பல்கலைக்கழகங்களும் அபிவிருத்தி செய்யப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.இதற்கான நிதி ஒதுக்கீடு சம்பந்தமான உயர்மட்ட மாநாடு இன்று கல்வி உயர்கல்வி அமைச்சின் செயலாளர் தலைமையில் நடைபெறவுள்ளது.சகல பல்கலைக்கழகங்களின் உபவேந்தர்களும் இந்த மாநாட்டிற்கு அழைக்கப்பட்டுள்ளனர்.


# அந்தியேட்டி சபிண்டீகரண அழைப்பு

*கடந்த சுபானு வருடம் ஐப்பசி மாதம் 11 நாள் (28.10.2003) செவ்வாய்க் கிழமை சிவபாதமெய்திய எமது குடும்பத் தலைவர்*



**அமரர்.கணபதிப்பிள்ளை சிவலோகநாதன்**

*அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் தாரண வருடம் சித்திரை மாதம் வீட்டுக் கிரியைகள் சித்திரை மாதம் 11 ம் நாள் (23.04.2004) வெள்ளிக்கிழமை அன்னாரது இல்லத்திலும் நடைபெறும் இவ்விரு நிகழ்விலும் தொடர்ந்தும் நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.*

இல141,பாண்டியன்குளம்,
நட்டாங்கண்டல்.

(சி.9379) அன்னாரின் குடும்பத்தினர்.

# பொலிஸ் நிலையங்கள் மீது திடீர்த் தாக்குதல் பஸ்ராவில் 61 பேர் பலி; 100பேர் படுகாயம்!

## குழந்தைகள் பலரும் பரிதாப மரணம்

(பாக்தாத்)

**ஈராக்கின் பஸ்ரா நகரிலுள்ள பொலிஸ் நிலையங்கள் மீது ஏவுகணைகளை வீசியும்,கார்க்குண்டுகளை வெடிக்கச் செய்தும் நேற்று அதிகாலை தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளன.**

**இதில் 61 பேர் கொல்லப்பட்டுள்ளார்கள். காயப்பட்ட 100 பேரில் பலரது நிலை கவலைக்கிடமாக இருப்பதாக கூறப்படுகின்றது.**

பிரிட்டிஷ் படைகளை சம்பவ இடத்திற்கு செல்லவிடாது மக்கள் தடுத்துவிட்டனர். இதனால் மீட்பு பணிகள் பாதிக்கப்பட்டன.

ஈராக்கில் அமெரிக்க கூட்டணி படையினருக்குஎதிரான தாக்குதல்களை சதாம்ஹுசைன் ஆதரவாளர்கள். தீவிரப்படுத்தியுள்ளார்கள். இதுவரை தலைநகர் பாக்தாத் மற்றும் அதனைச்சுற்றியுள்ள பகுதி களில் மட்டும் தாக்குதல் நடத்தி வந்த தீவிரவாதிகள் தற் போது தென் ஈராக்கிலும் தமது தாக்குதல் களை தொடங்கியுள்ளார்கள்.

தென்ஈராக்கில் பஸ்ரா நகரில் 3 பொலிஸ் நிலையங்கள் மீது நேற்று அதிகாலைதீவிரவாதிகள் ஏவுகணைத் தாக்குதல்களை நடத்தியுள்ளார்கள்.

அதனைத் தொடர்ந்து பொலிஸ் நிலையம்அமைந்துள்ள வளாகத்தினுள் கார்க்குண்டுகள் வெடித்துள்ளன. இதில் 61 பேர் உடல் சிதறி பலியாகியுள்ளார்கள். தீவிரவாதிகள் வைத்த கார்க்குண்டுகளுக்கிடையில் பாட சாலை குழந்தைகளது பேருந்தும் சிக்கிக்கொண்டது. இதனால் கார்க் குண்டுகள் வெடித்த வேளை பேருந்தும் தீப்பற்றியதில் 10திற்கும் மேற் பட்ட குழந்தைகளும் உடல் கருகி பலியாகியுள்ளனர்.

பொலிஸ் நிலையக் கட்டடங்கள் முதல் பொலிஸ் வாகனங்கள் வரை அனைத்துமே உருத்தெரியாத அளவிற்கு சிதைந்து போயுள்ளன.

இந்த தாக்குதலில் படுகாயம் அடைந்த 100இற்கும் மேற்பட்டோர் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

சம்பவ இடத்திற்குச் செல்ல முயன்ற பிரிட்டிஷ் படைகளை மக்கள் கற்களை வீசி தாக்கி விரட்டியடித்துள்ளார்கள்.

இதனால் மீட்புப்பணி தாமதப் படுவதுடன்,தாக்குதல் விபரம் சரியாகத் தெரியவரவில்லை என்றும் கூறப்படுகின்றது.

### புட்டிப்பால் அருந்தி 60குழந்தைகள் மரணம்

(பெய்ஜிங்)


சீனாவில் குழந்தைகளுக்கான புட்டிப்பால் குடித்ததால் 60 குழந்தைகள் பலியாகி உள்ளதாக செய்திகள் தெரிவித்துள்ளன. சீனாவின் புயாங்நகரத்தில் பெய்ஜிங் மேலும் 200குழந்தைகள் பாதிக்கப்பட்டுள்ளன.

# பாக்தாத் சிறைச்சாலை மீது. நள்ளிரவில் பீரங்கித் தாக்குதல்!

## -21கைதிகள் பலி, 100பேர் காயம்

ஈராக்கின் மேற்கு பாக்தாத் நகர சிறைச்சாலை ஒன்றின் மீது பீரங்கித்தாக்குதல் நேற்று முன்தினம் நடத்தப்பட்டுள்ளது. இதில் 21கைதிகள் உயிரிழந்துள்ளார்கள். 100பேர் காயமடைந்துள்ளார்கள்.இந்தவகையில்தான். பாக்தாத்திலுள்ள அபுஹைக் சிறைச்சாலையின் மீது நேற்றுமுன் பீரங்கித்தாக்குதல் நடத்தப்பட்டது. இதில் இறந்தவர்கள் அனைவரும் கைதிகள் என்றும் 100 கைதிகள் காயமடைந்ததாகவும் அமெரிக்க இராணுவ அதிகாரி ஜெனரல் மார்மித் செய்தியாளர்களிடம் கூறியுள்ளார்.

இதேவேளை அதிகரித்துவிட்ட தாக்குதல்களால் ஸ்பெயின், தென்கொரியப்படைகள் ஈராக்கை விட்டு வெளியேறத் தொடங்கிவிட்டதாகவும் கூறப்படுகின்றது.



ஐ.நா. தலைமைச் செயலகம் கட்டடத்தின் தோற்றம்

# சதாம்ஹுசைன் மீதான விசாரணைக்கு 11 பேர் கொண்ட விசாரணை மன்றம் அமைப்பு

(பாத்தாத்)

ஈராக்கின் முன்னாள் ஜனாதிபதி சதாம் ஹுசைன் மீதான குற்றச் சாட்டுக்களை விசாரணை செய்து தண்டனை வழங்குவதற்காக 11பேர் கொண்ட விசாரணை மன்றம் அமைக்கப்பட்டுள்ளது.

ஈராக்மீது போர் தொடுத்து சதாம் ஹுசைனை கைது செய்த அமெரிக்கா சதாம் ஹுசைன்மீது ஏராளமான குற்றச்சாட்டுக்களை சுமத்தியுள்ளது. இவற்றை விசாரணை செய்வதற்காக 07 நீதிபதிகள், 04 வழக்க றிஞர்கள் கொண்டவிசாரணை மன்றத்தை ஈராக் தலைவர்கள் அமைத்துக் கொண்டுள்ளார்கள்.

விசாரணை மன்றத்தலைவராக சமீத் கலாம் என்பவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

சதாம் ஹுசைன் மட்டுமன்றி அவரது பாத் கட்சியைச் சேர்ந்த மற்றைய தலைவர்கள் மீதான குற்றச்சாட்டுக்கள் குறித்தும் இந்த விசாரணை மன்றம் விசாரணை நடத்தும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.



அமெரிக்கா, ரஷ்யா, நெதர்லாந்து நாடுகளைச் சேர்ந்த விண்வெளி ஆய்வாளர்களைச் சர்வதேச விண்வெளி ஆய்வு மையத்திற்கு கொண்டு செல்லும் சொயுஸ் விண்கலம்

# அமெரிக்க நிலைப்பாட்டிற்கு ஆட்சேபம் புஷ்சை சந்திக்க ஜோர்தான் மன்னர் மறுப்பு

(அம்மான்)

அமெரிக்க சனாதிபதி ஜோர்ஜ் டபிள்யூ புஷ்சை சந்திக்க விருந்த யோர்தானிய மன்னர் அப்துல்லா தனது சந்திப்பை இரத்துச் செய்துள்ளார்.

இஸ்ரேல் தொடர்பான அமெரிக்கக் கொள்கைகளுக்கு ஆட்சேபம் தெரிவித்தே மன்னர் அப்துல்லா தனது பயணத்தை இரத்து செய்ததாக செய்திகள் தெரிவிக்கின்றன.

இதேவேளை இஸ்ரேல் சர்வதேசச் சட்டங்களுக்கு முரணாக நடத்தும் கொலைகளை நிறுத்திக் கொள்ள வேண்டும் என கூறி அரபு நாடுகள் ஐக்கிய நாடுகள் சபையில் தீர்மானம் ஒன்றைக் கொண்டு வர உள்ளதாக ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்துள்ளது.

இஸ்ரேல்கடந்த ஒருமாதத்தில் இரண்டு பலஸ்தீன கமாஸ் இயக்கத் தலைவர்களை அடுத்தடுத்து ஏவுகணைத்தாக்குதலில் கொலை செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இது தொடர்பாக முதலில் கொல்லப்பட்ட கமாஸ் இயக்க தலைவர் சேக் அகமட் யாசிமின் படுகொலையை கண்டித்து அரபு நாடுகள் ஐக்கிய நாடுகள் சபையில் கொண்டு வந்த தீர்மானத்தை மூன்று வாரங்களுக்கு முன்பு அமெரிக்கா வீட்டோ அதிகாரத்தின் மூலம் ரத்துச் செய்திருந்ததும் தெரிந்ததே.

ஆக்கிரமித்திருக்கும் மேற்கு கரை பிரதேசத்தின் சில பகுதியிலிருந்து தான் வெளியேற முடியாதென இஸ்ரேல் அறிவித்ததை அமெரிக்க சனாதிபதி ஆதரித்தார் இதனை அடுத்தே யோர்தானிய மன்னர் அப்துல்லா தனது அமெரிக்க விஜயத்தை ரத்துச் செய்துள்ளார்.

### மூன்று வாரங்களில் 800 ஈராக்கியர் பலி!

(பாக்தாத்)

ஈராக்கில் அமெரிக்க கூட்டணிப் படைகள் கடந்த மூன்று வாரங்களில் நடத்திய தாக்குதலில் எண்ணூறிற்கும் அதிகமான ஈராக்கியர்கள் பலியாகியுள்ளனர் என செய்திகள் தெரிவிக்கின்றன.

இதேகாலப்பகுதியில் 80 அமெரிக்க படையினரும் கொல்லப்பட்டுள்ளனர். என அறிவிக்கப்படுகின்றது. ஷியா, சன்னி முஸ்லீம் பிரிவுகள் தொடர்ச்சியாக அமெரிக்க கூட்டணிப் படைகளுடன் மோதல்களில் ஈடுபட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.



தமிழகத்தின் கடலூரில் நேற்று முன்தினம் நடைபெற்ற மக்களவை தேர்தல் பிரச்சார கூட்டத்தில் தி.மு.க தலைவர் மு.கருணாநிதி.

# முதற்கட்ட மக்களவைத் தேர்தலில் பா.ஜ.க.விற்கு அதிக இடங்கள்!

## -கருத்துக்கணிப்பிற்கு காங்கிரஸ் ஆட்சேபம்

(புதுடில்லி)

நேற்று முன்தினம் நடந்துமுடிந்துள்ள 140 மக்களவைத் தொகுதித் தேர்தலில் பாரதிய ஜனதா கட்சியின் கூட்டணி 70-93 இடங்களைக் கைப்பற்றும் என்று கருத்துக்கணிப்பு கூறியுள்ளது

ஸ்ரார், சகாரா உள்ளிட்ட 5 தொலைக்காட்சி நிறுவனங்கள் தகவல்களைத்திரட்டி இந்த கணிப்பீட்டை வெளியிட்டுள்ளன.

இதேவேளை இந்த முதல்கட்ட தேர்தலில் காங்கிரஸும் அதன் கூட்டணிக் கட்சிகளும் 40-53 இடங்களையே கைப்பற்றும் என்றும் இந்த கருத்துக்கணிப்பு கூறியுள்ளது

இதேவேளை மக்களவைத் தேர்தல் முடிவில் பாரதிய ஜனதா கூட்டணி 260-270 இடங்களையும், காங்கிரஸ் கூட்டணி 165-185 இடங்களையும் கைப்பற்றும் என்றும் இந்தக் கருத்துக் கணிப்பு மேலும் கூறியுள்ளது.

இதேவேளை வாக்குப்பதிவுகளை அடுத்த கருத்துக்கணிப்புக்களுக்கு தடைவிதிக்க முடியாது என்று தேர்தல் ஆணையம் திட்டவட்டமாகக் கூறியுள்ளது.

இதேநேரம் இதுபற்றிய சட்டநடவடிக்கை பற்றிதாம் ஆலோசித்து வருவதாகவும்கூறியுள்ளனர். வாக்குப் பதிவுகளை அடுத்த கருத்துக் கணிப்புக்களுந தடைவிதிக்க வேண்டும் என்று தேர்தல் ஆணையத்திடம் காங்கிரஸ் கேட்டுக் கொண்டுள்ளது.



இந்திய மக்களவை தேர்தல் முதல்கட்ட வாக்களிப்பு தினமான நேற்று முன்தினம் வன்முறையில் ஈடுபட்ட இளைஞனொருவர் பொலிசாரினால் தாக்கப்படுகின்றார்.

# சோனியா போட்டியிடும் தொகுதியில் மோசடிகளைத் தடுக்க ஏற்பாடு

(புதுடில்லி)

இந்திய காங்கிரஸ் கட்சியின் தலைவி சோனியா காந்தி போட்டியிடும் றெபரேலி தொகுதியில் வாக்குபதிவின் போது கூடுதல் மேற்பார்வையாளராக ஒருவரை நியமிக்கவும் பதற்றம் நிறைந்த வாக்குச் சாவடிகளில்வாக்குப்பதிவின்போது வீடியோ எடுக்கவும் தேர்தல் ஆணையம் உத்தரவிட்டுள்ளது

காங்கிரஸ் தலைவி சோனியா காந்தி போட்டியிடும் தொகுதியில் வாக்குப்பதிவில் மோசடிகள், முறைகேடுகள் நடக்க வாய்ப்புள்ளதுஎன்று டில்லியில்தேர்தல் ஆணையகத்திடம் பிரியங்கா காந்தி நேற்று முன்தினம் மனுவைக் கொடுத்திருந்தார்.அத்துடன் இதனைத் தடுத்து நிறுத்த வேண்டும் என்றும் அந்த மனுவில் அவர் கேட்டிருந்தார்.

தலைமைத் தேர்தல் ஆணையாளர் ரி.எஸ்.கிருஸ்ணமூர்த்தி, தேர்தல் ஆணையர் என்.கோபாலசாமி ஆகியோரிடமே இந்த மனுவை பிரியங்கா கொடுத்திருந்தார். அத்துடன் றெபரேலியில் பதற்றம் நிறைந்த இடங்கள் பற்றிய பட்டியலையும் அவர் இணைத்திருந்தார்.

இதனையடுத்து இந்த மனுமீது விசாரணை நடத்திய தேர்தல் ஆணையம், றெபரேலி தொகுதிக்கு கூடுதல் மேற்பார்வையாளர் ஒருவரை நியமிக்க முடிவு செய்துள்ளது. அத்துடன் பதற்றம் நிறைந்ததாக பிரியங்கா குறிப்பிட்ட வாக்குச்சாவடிகளில் வாக்களிப்பின் போது வீடியோ எடுக்கவும் முடிவு செய்து நேற்று உத்தரவிட்டுள்ளது.

# நீர்வெறுப்பு நோய் அல்லது
# விலங்குவிசர் நோய் (RABIES)

இது விலங்குகளின் மூலம் வைரசினால் பரப்பப்படும் நோயாகும். நோய்க்காரணி "RABDOVIRUS" (ரப்டோவைரஸ்) ஆகும்.

- பரப்பும் பொதுவான விலங்கு.
நரி, பூனை, நாய், கால்நடைகள்
-இரண்டுவகை
1.Uiban Rabies -இவை மனிதருக்கு விசர் நாய்களினூடாக பொதுவாக பரப்பப்படுகின்றது.
2.Sylvan (wil Rabies - இவை பொதுவாக நரிகளினூடாக பரப்பப்படுகின்றது.

- பொதுவாக உலகளாவிய ரீதியில் விலங்கு விசர்நோய் காணப்படுகின்றது. இருந்த போதிலும் அவுஸ்திரேலியா, நியூசிலாந்து உள்ளிட்ட அந்தாட்டிக்கா போன்ற நாடுகளில் இவை இதுவரை இருப்பதாக முறையிடப்படவில்லை.

- தொற்றுக்கு உட்பட்ட விலங்குகள் மனிதரை கடிக்கும்போது அல்லது அவற்றின் உமிழ்நீர் புண்போன்ற வெளியேதெரியும் மேற்பரப்புக்களில் படுவதன் மூலம் பரவும்.
- முத்தமிடுதல், உடலுறவு, மனிதன்-மனிதனை கடித்தல் இவ்வாறு நோய்பரப்பப்படும் என்று இதுவரை முறைப்பாடுகள் இல்லை.
- மிக அரிதாக வளியூடாக இது பரப்பப்படலாம்.


## நோய் பரப்பப்படும் முறை

-நோய்க்காரணி கடிக்கப்பட்ட இடத்தில் உள்ள தசைகளில் பிரிந்து பெருகும்.
-அங்கிருந்து நரம்புகளினூடாக முண்ணான் மூளை போன்ற பகுதிகளிற்கு கடத்தப்படும்.
-நரம்புத்தொகுதியில் இவை மீண்டும் பிரிந்து பெருகும் பின் உமிழ்நீர் சுரப்பிகள், நுரையீரல், சிறுநீரகம் மற்றைய உறுப்புக்கள் என்பவற்றிற்கு பரபிரிவு/ தன்னாட்சி நரம்புகளிற்கூடாக பரப்பப்படும்

நோயாளிகள் (CLINICAL FEATURES)
- நோயரும்புகாலம் (Encubation Period) வேறுபடலாம். சிலவாரங்கள் தொட்டு வருடங்கள் வரை செல்லலாம். சராசரியாக 1-3 மாதங்கள்
-தலை,கழுத்து,முகம் இவற்றிற்கூடாக வேகமாகப்பரப்பப்படும்.
- காலிற்கூடாக நோய் பரவும் சாத்தியக்கூறு 10%
-தலை கழுத்து ஊடாக நோய்பரவும் சாத்தியக்கூறு 90%
-இரண்டுவகை
1.FURIOUS RABIES
2.DUMB RABIES

## FURIOUS வகையின் நோயறிகுறிகள்

- கடிக்கப்பட்ட இடத்தில் நோவு,அரிப்பு போன்ற ஆரம்ப அறிகுறிகள் தென்படும்.
- காய்ச்சல், உடல்அலுப்பு, தலையிடி என்பன தொடர்ந்து காணப்படும்.
- 10 நாட்களிற்குப் பின் பயம்(AnXity), ஓய்வின்மை (Agitation), உளத்தாழ்வு நிலை(Depression) என்பன காணப்படும்.
- மாயப்புலனுணர்வுகள் (Hallucination) விசித்திரமான நடத்தைகள் (Bizarre Behavior)
- நீர்வெறுப்பு(Hydro Phobia) -நீரைக்கண்டால் பயம்
- சுழல்காற்றை சகிக்க முடியாமை(Aero Phobia) -நீர்வெறுப்பு நோய் அல்லது விலங்கு விசர் நோய் என்பதை உறுதிப்படுத்த இது ஒன்றே போதுமானது.



## Dumbவகையின் நோயறிகுறிகள்:-

காலில்தொடங்கி ஆரம்பித்து நெஞ்சறைவரை தசைகள் தளர்ந்து விலகுவதால் ஏற்படுகின்ற சுவாச சிக்கல் மரணத்தை ஏற்படுத்தும்.

## விசர் நாய்க்கடிக்குரிய மருத்துவம்

விசர் நாய்கடித்த குறித்தவொரு நபருக்கு விசர் நோய்/நீர் வெறுப்பு நோய் ஏற்பட்டால் மரணம் தடுப்பதற்கில்லை. இதுவரை உலகில் 2 மனிதர்கள் விலங்கு விசர் நோய் காரணிகளுடன் வாழ்வதாக அறியமுடிகின்றது.

விலங்குவிசர் கண்ட நோயாளியை தனிமைப்படுத்தி இருளான அறையில் பராமரித்தல், நாளவழித்திரவங்கள், சுவாச, இதய செயற்பாட்டு உதவிகள் போன்றவற்றை வழங்குதல் பயம்,ஓய்வின்மையுடன் உள்ள நோயாளிகளை சாந்தப்படுத்த தேவையான மருந்துகளை கொடுத்தல்

## விலங்குவிசர் நோயை தடுத்தல்

இதனை இரண்டு வகையாக நோக்கலாம்
1.நாய் கடித்த பின் தடுத்தல்.
2.நாய் கடிக்கும் முன் தடுத்தல்.

## நாய் கடித்த பின்

கடிக்கப்பட்ட இடத்தை ஓடும்நீர், சவர்க்காரம் கொண்டு கழுவுதல்,
ஏற்பூசி ஏற்றல்,
நுண்ணுயிர் கொல்லிகள் மூலம் கிருமித் தொற்றை கட்டுப்படுத்தல்.
இவை செய்யாதவிடத்தும் செய்ய வேண்டிய முக்கியமான மருத்துவமுறை:-
கடிக்கப்பட்ட நாய் விலங்குவிசர் நோய் உள்ளது என்பது உறுதியானால்கடிக்கப்பட்ட இடத்தை சுற்றி ARS எனப்படுகின்ற ஊசிமருந்தின் அரைப்பகுதியை கொடுத்தல்; மிகுதியை தசை வழியாக கொடுத்தல் பின்னர் விலங்கு விசர் நோய் எதிர் வக்சின் ARV (vaccine) கொடுத்தல்.

இம்மருந்து தசைகளிற்கூடாக கொடுக்கப்படும். மொத்தமாக 5 ஊசிகள் ஒரு மாதத்திற்குள் கொடுக்க வேண்டும். ஊசியேற்றப்பட்ட நாள்,3ஆம்,7ஆம்,14ஆம்,28ஆம், நாளில் தவறாமல் கொடுத்தல் வேண்டும்.

## நாய் கடிக்குமுன்

பரப்பும் விலங்குகளை கட்டுப்படுத்தல்.
இலங்கையை பொறுத்தவரை இந்நோய் நாய்கள்,பூனைகள் போன்ற செல்லப்பிராணிகள் மூலம் பரப்பப்படுவதால் செல்லப் பிராணிகளை.
1.கட்டிவளர்க்க வேண்டும்.
2.தவறாமல் தடுப்பூசி போடுதல் வேண்டும்.
பெரும்பாலும் கட்டாக்காலி நாய்கள் மூலமே இவை பரப்பப்படுகின்றன.

## கட்டாக்காலி நாய்களை கட்டுப்படுத்துவதற்கு

1.நாய்களை அழித்தல்
அ) பிடித்து அழித்தல்
ஆ) நஞ்சூட்டி அழித்தல்
இ) வெடிவைத்து அழித்தல்
ஈ) அடித்துக் கொல்லல் இவற்றை நமது மக்களின் விருப்புவெறுப்புக்களை நாடி பிடித்து அறிந்து செயற்படுத்தலாம்.
2. கட்டாக்காலிகளை பிடித்து மலடாக்கல்.
3. கட்டாக்காலிகளிற்கு தடுப்பூசி போடுதல்.

வைத்திய கலாநிதி
பா.யூ.ஜே.ரமேஸ் ஜெயக்குமார்

அசாத்தியமானது முயன்றால் சாத்தியப்படுத்தலாம்.
விலங்கு விசர் நோய் ஏற்பட்டால் மரணம் ஏற்படுவது நூறுவீதம் நிச்சயம் என்பதால் வருமுன் காப்பதே பொருத்தமானது.

# சம்பள உயர்வு ரத்துச்செய்தமையை ஆட்சேபித்து வைத்தியர்கள் வழக்குத் தாக்கல்

(கொழும்பு)
சுகாதார அமைச்சினால் கடந்த பெப்ரவரி மாதம் வெளியிடப்பட்ட சம்பள உயர்வுக்கான சுற்று நிருபத்தில் வழங்கப்பட்ட சம்பள உயர்வை பின்னர் ரத்துச் செய்தமையை ஆட்சேபித்து பதிவு செய்யப்பட்ட, மற்றும் உதவி வைத்தியர்கள் நீதிமன்றில் வழக்கு ஒன்றை தாக்கல் செய்துள்ளனர்.மேற்படி சம்பள உயர்வு பெப்ரவரி மாதம் 6ஆம் திகதி வெளியான சுற்றுநிருபத்தின் மூலம் ரத்துச் செய்யப்பட்டதையடுத்து மேற்படி வைத்தியர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்தச் சட்டப்படி வேலை நிறுத்தம் மூன்றாவது மாதமாக தொடர்ந்து நடைபெறுகின்றது. இதனால் குறிப்பாக மத்திய மருந்தகங்களின் வைத்திய சேவை பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

# முல்லை. ப.தெ.வ.அ.கூ.சங்கம் புதிய கட்டடத்தில் இயங்கும்

(முல்லைத்தீவு)
முல்லைத்தீவு செம்மலையில் இயங்கிவரும் பனை தென்னைவள அபிவிருத்தி கூட்டுறவுச்சங்கம் புதிய கட்டடத்தில் இயங்க உள்ளது.

எதிர்வரும் 26 அன்று புதிதாக நிர்மாணிக்கப்பட்ட கட்டடத்தில் அலுவலகம் திறந்து வைக்கப்படவுள்ளது எனஇச்செயலகத்தின் பொது முகாமையாளர் தெரிவித்தார். (20)

# பொருண்மிய மதியுரையகத்தின் 2ஆம் நாள் ஆய்வரங்கு

(ஒட்டுசுட்டான்)
பொருண்மிய மதியுரையகத்தின் சர்வதேச கலந்துரையாடலின் இரண்டாம் நாள் ஆய்வரங்கு நேற்று முன்தினம் நடைபெற்றுள்ளது.

காலை8.30 மணியளவில் பொருண்மிய மதியுரையகத்தின் ஐக்கிய இராச்சிய பிரதிநிதியான திருமதி.எலிசமான் தலைமையில் ஆரம்ப நிகழ்வு நடைபெற்றது.

இதில் பல தீர்மானங்கள் எடுப்பதற்காகவும் கலந்துரையாடப் பட்டதைத் தொடர்ந்து காராளி செயற்கைமுறைச் சினைப்படுத்தல் நிலையம், கிளிநொச்சி கிராமிய அபிவிருத்தி வங்கி, ஆனையிறவு உப்பு உற்பத்தி நிறுவனம் ஆகியவற்றைப் பார்வையிட்டுள்ளனர்.

வட-கிழக்கின் சுற்றுசூழல் பற்றி முக்கியப்படுத்தி பொ.ஐங்கரநேசன் அவர்கள் சிறப்புரைக் கருத்து வழங்கினார். (05)

# சகலபிரச்சினைகளையும் தீர்ப்போமெனக் கூறி அரசமைத்தவர்கள் அமைச்சரவையைக் கூட்ட முடியாதுள்ளனர்

(கொழும்பு)
புதிய அரசு அமைத்து 15 நாட்கள் கடந்து விட்டது. நாட்டின் சகல பிரசசினைகளையும் தீர்ப்போம் என்று கூறி பதவிக்கு வந்த அரசு கெபினட் அமைச்சரவையை கூட்டுவதற்கு பெரும் சிக்கல்களை எதிர்நோக்கியுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த முன்னாள் அமைச்சர் ராஜித சேனாரத்ன ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியை சாடியுள்ளார்.

கெபினட் அமைச்சுப் பதவிகளுக்காக சிறிலங்கா சுதந்திரக் கட்சியும், ஜே.வி.பியும் அதிகாரப் போட்டி யுத்தமொன்றினை நடத்தி வருகின்றனர். மகாவலி அமைச்சு சிறிசேனவுக்கு வழங்காவிட்டால் மகாவலிகங்கையின் தண்ணீர் வற்றிவிடுமாம் கால்நடை அமைச்சு ஜே.வி.பி வழங்காவிட்டால் கரவை மாடுகளின் பால் வற்றிவிடுமாம். இதுவே தற்போதைய கட்சிகளின் நிலைப்பாடு மிக கோலாகலமாக பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் இரு கட்சியினரும் கையொப்பம் இட்டு ஐக்கிய சுதந்திர மக்கள் முன்னணியை உருவாக்கி உள்ளனர். 350 ரூபாவிற்கு பசளை விநியோகம், அத்தியவசியப் பொருட்களின் விலைகள் உடனடியாகக் குறைப்பு, அரச ஊழியர்களின் சம்பள உயர்வு, இரண்டு மாதங்களில் 30000 பேர்களுக்கு அரச திணைக்களங்களின் வேலை வாய்ப்புப்பெற்றுக் கொடுத்தல், இவைகள் யாவும் ஐ.ம.சு. முன்னணியால் மக்களுக்கு கொடுத்த வாக்குறுதிகளாகும். இவற்றைப் புதிய அரசாங்கம் கட்டாயமாக நிறைவேற்றி ஆகவேண்டும். வாக்குறுதிகளைக் காப்பாற்ற வேண்டும் என்பதை நான் அரசாங்கத்திடம் வேண்டிக்கொள்கிறேன் என ராஜிதசேனரத்ன மேலும் குறிப்பிட்டுள்ளார்.



# ஆனையிறவு வெற்றிச்சமர்

# நான்காவது ஆண்டு பூர்த்தி

சு.பாஸ்கரன்

சுமார் இரண்டு தசாப்த காலத்திற்கு எமது தாயகமும், மக்களும் பெரும் போரையும் போரின வடுக்களையும் சுமந்து இன்று இரண்டரை வருட காலமாக ஒரு மௌன சமாதானத் திற்குள் வாழ்ந்து வருகின்றனர். கடந்த காலங்களில் போரின் மூலம் வெற்றிகொள்ள முனைந்து வந்த சிங்கள இனவாத அரசிற்கு யுத்தம் மூலம் தமிழ் மக்களை வெல்ல முடியாது எனவும் இச்சமாதான வழிமுறைக்கு அரசை திசை திருப்பியமை ஆனையிறவுப் படைத்தள மீட்பும், தீச்சுவாலைமுறியடிப்புச் சமரும்தான் இந்தச் சமாதான முயற்சிக்கு வழிகோலியது என்பதில் எந்த வித ஐயப்பாடும் இல்லை. கடந்த 2000 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் இதேநாள் தமிழீழ தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்களின் நேரடி நெறிப்படுத்தலின் கீழ் ஓயாத அலைகள்-03 இன் மூலம் விடுதலைப் புலிகளால் வெற்றி கொள்ளப்பட்ட ஆனையிறவுப் படைத்தளம் வெற்றியின் 4வது ஆண்டு நிறைவு விழாவாகிய இன்றைய நாளில் இம் முகாம் அமைக்கப்பட்டது தொடர்பாகவும் அப்பகுதியின் பௌதீக இயல்புபற்றியும் நோக்குவோமாயின்

ஒரு புறம் பரப்பு கடலையும் ஏனைய பகுதிகள் சதுப்பு நிலங்களையும் பற்றைக் காடுகளைக் கொண்ட ஒரு பெருவெளிப்பிரதேசமாக காணப்பட்டதோடு யாழ் நகரையும் வன்னி பெருநிலப்பரப்பையும் இணைக்கும் வகையில் அரைமைல் நீளமான தாம்போதி (பாலம்) மூலம் இணைக்கின்றமையும் பெருந்தொகை யான உப்பினை உற்பத்தி செய்யக் கூடிய ஒரு வளமிக்க பிரதேசமாகவும் காணப்படு கின்றது.

பச்சிலைப்பள்ளி பிரதேசம் தொடக்கம் பூநகரி கரைச்சிப் பிரதேசங்கள் காடுகளாக காணப்படுவதால் சதுப்புநில கடல் வற்றுக்காலங்களில் யானைகள், இவ்விரு பிரதேசங்களில் இருந்தும் அடிக்கடி இடம்மாறிக்கொண்டன. இவ்வாறு இடம் பெயர்வதற்கு உகந்த குறுகிய மிகவும் ஒடுங்கிய பகுதியாக ஆனையிறவு காணப்பட்டது. "இறவு" என்றால் பள்ளம், அல்லது இறக்கம் அல்லது கடத்தல் எனப்படுகின்ற இடம். காலப்போக்கில் இவ்விடம் ஆனையிறவு என தொன்று தொட்டு தமிழர்களால் குறிப்பிடப்பட்டு வருகின்றது.

இவ்வாறு சிறப்பம்சம் கொண்ட இப்பிரதேசத்தினை ,மையமாக வைத்து 1280 ஏக்கர் நிலப் பரப்பில் ஏ-9 சாலை அடங்கலாக ஏ-9 சாலையின் மேற்கு பக்கமாக உள்ள குறிஞ்சாத்தீவு குடியிருப்புக்களில் சில பகுதிகளையும் யாழ் குடாக்கடல் ஏரிக்கு தெற்காக ஆனையிறவு உப்பளத்தைச் சூழவுள்ள பகுதிகளையும் கொண்டு அகலக் கால் பதித்து தமிழர்களை காலம் காலமாக துன்புறுத்திய இப்படைத்தளம் 1760 ஆம் ஆண்டு காலப்பகுதியில் டச்சுக் காரரினால் காவற்கோட்டையாகவும் வாடி வீடாகவும் முதன் முதலில் அமைக்கப்பட்டது. இக்கோட்டை காலப் போக்கில் அதாவது 1948 ஆம் ஆண்டு இலங்கையை விட்டு ஆங்கிலேயர் வெளியேறியதும் சுங்க இலாகாவினதும் வனபரிபாலன திணைக்களத்தினதும் தடை முகாமாக மாற்றப்பட்டது. 1958 ஆம் ஆண்டு தமிழ் மக்கள் மீது கட்டவிழ்த்து விடப்பட்ட இனக்கலவரத்தின் பின் சிறிலங்கா அரசின் இராணுவ முகாமாக மாற்றம் செய்யப்பட்டு மூன்று ஆண்டுகளின் பின் 1961 ஆம் ஆண்டு சிறிமாவோ பண்டாரநாயக்கா ஆட்சிக்காலத்தில் பொலிஸ் நிலையம் ஒன்றும் அமைக்கப்பட்டது. தொடர்ந்து 1977 ஆம் ஆண்டு ஜே.ஆர்.ஆட்சிக் காலத்தில் இதனைச் சூழவுள்ள பகுதிகளில் நிரந்தரக்கட்டடங்களை அமைத்து 1979 ஆம் ஆண்டு யூலையில் இராணுவமுகாம் விஸ்தரிக்கப்பட்டு வாடி வீடு பெரும் சித்திரவதைக் கூடமாக மாற்றியமைக்கப்பட்ட நிலையில் பல அப்பாவி பொதுமக்களின் உயிர்களைக் காவு கொண்டதாக இத்தளம் இருந்தது.

1987 ஆம் ஆண்டு இந்திய ஆக்கிரமிப்பு படைகள் சிறிலங்காப் படையினருடன் இணைந்து இப்பகுதியில் முகாம் அமைத்ததை அடுத்து இக்காலப்பகுதியில் படைத்தளம் மேலும் விஸ்தரிக்கப்பட்ட நிலையில் இந்திய இராணுவ வெளியேற்றத்தின் பின் 1990 ஆம் ஆண்டு யூன் மாதம் 10 ஆம் நாள், ஆனையிறவுப் படைத்தளம் தமிழீழ விடுதலைப் புலிகளால் முற்றுகையிடப்பட்டு 1991 ஆம் ஆண்டு யூலை மாதம் 10 ஆம் நாள் ஆனையிறவு படைத்தளத்தை அகற்றும் நோக்குடன் விடுதலைப் புலிகளின் மரபுவழி ரீதியான போர் தொடுக்கப்பட்டு மினிமுகாம்களில் ஒன்றான உப்பள படைமுகாம் உப்பள விடுதி முகாம் என்பன புலிகளால் கைப்பற்றப்பட்டன. இந்நிலையில் எதிரி கடற்படையின் உதவியுடன் வெற்றிலைக்கேணி, கட்டைக்காடு பிரதேசமூடான தரையிறக்கம் ஒன்றினை மேற்கொண்டு ஆனையிறவு படைமுகாம் மீதான முற்றுகையை உடைக்க முனைந்தனர். இப்பகுதியிலும் புலிகளின் அணி மோதலைத் தொடர்ந்து புல்லாவெளி, முள்ளியான் பகுதிகளில் பெரும்சமர் நடைபெற்று இரண்டு நாட்களில் எட்டுக்கிலோமீற்றர் தொலைவில் உள்ள ஆனையிறவுத் தடைமுகாமை சென்றடைவோம் எனப் பிரகடனப்படுத்திய சிறிலங்காப் படையினர் சங்கிலித் தொடராக 24நாட்கள் ஆமை வேகத்தில் நகர்ந்து ஆனையிறவைச் சென்றடைந்தனர்.

தொடர்ந்து புலிகளால் முதன்முதல் பெயர் சூட்டி மேற்கொள்ளப்பட்ட ஆகாயக்கடல் வெளிச் சமரானது கணிசமான அளவு வெற்றிகளுடன் தாக்குதல்கள் தற்காலிகமாக இடைநிறுத தப்பட்டன.

பின்னர் வன்னி யாழ்ப்பாணம் என தமிழர்களின் பாரம்பரிய நிலப்பரப்புக்களை சிங்கள இராணுவத்தினர் ஆக்கிரமிக்கும் நோக்குடன் சத்ஜெய-1,சத்ஜெய-2, ஜெயசிக்குறு,ரிவிரச-1,ரிவிரச-2, ரிவிபல, ரணகோஷ எனப்பல பெயர்களில் படையெடுப்புக்களை மேற்கொண்டு பாரிய நிலப்பகுதிகளை ஆக்கிரமித்த நிலையில் ஆட்சியிலிருந்த சந்திரிகா அரசாங்கம் புலிகள் பலம் இழந்துவிட்டார்கள். இனிப் புலிகள் போராடும் சக்தி இழந்துவிட்டார்கள் என்று உலகநாடுகள் எல்லாம் ஊதிவந்தவேளைகளில் தமிழீழ தேசியத்தலைவர் மேதகு வே.பிரபாகரன் அவர்களின் நெறிப்படுத்தலின் கீழ் புலிகளால் ஓயாத அலைகள் படைநடவடிக்கை கட்டம் கட்டமாக மேற்கொள்ளப்பட்டது. இதில் முதலாவது நடவடிக்கை மூலம் முப்படைகளையும் கொண்டு விளங்கிய முல்லை நகரம் வெற்றி கொள்ளப்பட்டது. அடுத்து ஓயாத அலைகள் இரண்டில் கிளிநொச்சிப் படைத்தளம் வெற்றி கொள்ளப்பட்டது. இந்நிலையில் போர் ஓய்விற்கு வரவில்லை என்பதை எடுத்துக்காட்டும் நோக்குடன் ஓயாத அலைகள்-03 சமர்க்களம் வன்னிப் பிரதேசத்தில் பலமுனைகளில் ஆரம்பிக்கப் பட்டது. படுகாட்டில் பட்ட தீ போல ஓயாத அலைகள் 3எங்கும் பற்றிக்கொண்டது. ஏ-9பாதை பிடித்து யாழ் கண்டி தரைவழிப்பாதை பிடிக்க வந்த பகைவன் பாதையிலேயே பாடை ஏறினான். அத்தோடு மட்டும் போர்நின்று விடவில்லை. 240ஆண்டுகள் பழமைவாய்ந்த படைத்தளமான ஆனையிறவையும் சிறிலங்காப் படைகள் இழந்துவிட்டன.

சிறிலங்காவின் முப்படைகளையும் சேர்த்து 15,000 படையினருடன் 240சதுரமீற்றர் நிலப்பரப்புடன் 2000ஆம் ஆண்டு காணப்பட்ட படைமுகாம் கடந்த 2000ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் இதேநாள் புலிகள் வசம் வீழ்ந்த நிலையில் சந்திரிகா அரசு தனது படைகளை ஆனையிறவு படைத்தளத்தை அண்டிய பகுதிகளைவிட்டு தந்திரமாக பளைப்பகுதிக்கு நகர்த்தியுள்ளதாக தமக்கு ஏற்பட்ட தோல்வியை தந்திரமாக மூடிமறைக்க முயன்றனர். அடுத்து ஏப்ரல் 30ஆம் நாள் பளை பெரும்படைத்தளம் புலிகளால் 12மணி நேரச்சமரில் வெற்றி கொள்ளப்பட்டது.

போரின்மூலம் சமாதானத்தைப் பெற்றுக் கொள்ள முடியும் என்று உலகநாடுகளுக்கு ஊதிவந்த அரசின் கபடநாடகமும், விடுதலைப்புலிகளின் உயரிய பலம் உலக நாடுகள் எங்கும் நிதர்சனமாகிய நிலையில் 17,600ற்கும் மேற்பட்ட மாவீரர்களின் உயிர்த்தியாகத்தினாலும்,அவர்கள் சிந்திய செங்குருதியினாலும் தான் இன்றைய சமாதானம் மலர்ந்துள்ளது. ஆனையிறவு மீட்கப்பட்டு 4ஆண்டுகள் நிறைவடைந்துள்ள இன்றைய நாளை பல்லாயிரம் ஆண்டுகள் கடந்தாலும் எமது விடிவிற்காகவும் தமது எதிர்கால சந்ததிக்காகவும் போராடி வீழ்ந்த வீரமறவர்களின் புகழ்இன்றுபோல் என்றும் விண்ணையும் விஞ்சிநிற்கும் அளவில் இந்த மாவீரர்கள் எந்த இலட்சியத்திற்காக தமது விலைமதிப்பற்ற உயிர்களையும் கொடுத்து அவர்களின் குருதி உறைந்துள்ள தேசத்தில் வாழும் ஒவ்வொருவரும் அவர்களின் சுவடுகளை பின்பற்றி மிகவிரைவில் எமது தேசத்தின் விடுதலையை வென்றெடுப்போம்.

## பளை, முகமாலைப் பகுதிகளுக்கு சுன்னாகத்திலிருந்து மின்சாரம்

(கொழும்பு)

சுன்னாகம் மின் விநியோக நிலையத்தில் இருந்து இராணுவக் கட்டுப்பாடற்ற பிரதேசங்களுக்கும் மின்விநியோகம் மேற்கொள்ளப்படவுள்ளதாக சிறிலங்கா மின்சார சபையின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்

அவர் மேலும் தெரிவிக்கையில் இத்திட்டத்தின் கீழ் பளை,முகமாலை ஆகிய பகுதிகளில் வாழும் குடும்பங்களுக்கு மின்சாரம் வழங்கப்படவுள்ளதாக தெரிவித்துள்ளார்.

மேற்படி திட்டத்திற்கான வேலைகள் ஆரம்பிக்கப்படவுள்ளதாகவும்இதன் மூலம் ஏ-9 நெடுஞ்சாலையில் உள்ள இராணுவ சோதனைச் சாவடிகளுக்கும் மின்சாரம் வழங்கப்படவுள்ளதால் ஏ-9 நெடுஞ்சாலையை 24 மணி நேரமும் மக்கள் பயன்படுத்த வாய்ப்புக்கள் கிடைக்குமெனவும் அவர் தெரிவித்துள்ளார்.

### புல்மோட்டைக் கடலினுள் ஆயுதங்கள் கண்டுபிடிப்பு

(கொழும்பு)

புல்மோட்டைக்கு சமீபமாக உள்ள கடற்பிராந்தியத்தில் ஆயுதங்கள் வெடிமருந்துகள் அடங்கிய பெட்டி ஒன்று கண்டெடுக்கப்பட்டுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

இந்தப் பெட்டி சுமார் 60யார் ஆழத்தில் இருந்ததாகவும் ரி-56 துப்பாக்கிகள் உட்பட பெருமளவு ஆயுதங்கள் மற்றும் வெடிமருந்துகள் அந்தப் பெட்டியில் காணப்பட்டதாகவும் அறிவிக்கப்படுகின்றது.மீனவர்கள் தெரிவித்த முறைப்பாட்டை அடுத்து சுழியோடிகள் இந்தப் பெட்டியை கைப்பற்றியதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

## விபத்து தொடர்பாக கைதான சாரதிக்கு விளக்க மறியல்

(வடமராட்சி)

தென்மராட்சி-மந்துவில் கல்வயல் பகுதியில் இடம்பெற்ற வாகன விபத்துச்சம்பவம் தொடர்பில் கொடிகாமம் பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ள வாகனச் சாரதியை எதிர்வரும் மேமாதம் 3ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்க சாவகச்சேரி நீதவான் பொலிசாருக்கு உத்திரவிட்டுள்ளார்.

மாகியப்பிட்டி பகுதியைச் சேர்ந்தவரான தியாகராசா கரிகரன் எனும் சாரதியே ஞாயிறுக்கிழமை கைது செய்யப்பட்டுநீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டுள்ளனர். இச்சம்பவத்தில் மணல் ஏற்றிவந்த பாரவூர்தியால் மோதப்பட்டு ஒருவர் உயிரிழந்திருந்ததுடன் மற்றுமொருவர் படுகாயமடைந்தமை குறிப்பிடத்தக்கது. (27)

## நான்காயிரம் பொலிசாருக்கு மே மாதத்தில் பதவியுயர்வு

(கொழும்பு)

பொலிஸ் சேவையிலுள்ள சுமார் நான்கு ஆயிரம் பேருக்கு அடுத்தமாத இறுதியில் பதவி உயர்வுகள் வழங் கவும், இடமாற்றம்செய்யவும் பொலிஸ் ஆணைக்குழு தீர்மானித்துள்ளது.பொலிஸ் திணைக்களத்தில் சகல மட்டங்களிலும் நீண்ட காலமாக பதவி உயர்வு மற்றும் இடமாற்றம் கிடைக்காதோருக்கு அவற்றை வழங்குவதென்று பொலிஸ் ஆணைக்குழு தீர்மானித்துள்ளது.

# யாழ்.குடாநாட்டில் சுகாதார நிலைமைகள் அரசின் புறக்கணிப்பால் மோசமாக பாதிப்பு!

## -யாழ். மாவட்ட அபிவிருத்தி நலஉரிமைச் சங்கம் கவலை

**யாழ். மாவட்டத்தின் சுகாதார நிலைமைகள் மீது அரசின் புறக்கணிப்பு காரணமாக அங்கு சுகாதார நிலைமைகள் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டுவருகிறது என யாழ். மாவட்ட அபிவிருத்தி நல உரிமைச்சங்கம்கவலை தெரிவித்துள்ளது.**

அந்த அடிப்படையில் 6 லட்சத்திற்கும் மேற்பட்டோர் வாழும் யாழ். மாவட்டத்திற்கு ஆகக் குறைந்தபட்சம் 11 சுகாதார வைத்திய அதிகாரிகளாவது நியமிக்கப்பட வேண்டும். ஆனால் யாழ். மாவட்டத்திற்கென ஒரே ஒரு சுகாதார வைத்திய அதிகாரியே நியமிக்கப் பட்டுள்ளார்.

ஏனைய வெற்றிடங்கள் 10ஐயும் நிரப்புவதற்கு அரசாங்கம் உரிய நடவடிக்கைகளை எடுக்க தவறியுள்ளமையால் யாழ்.மாவட்ட சுகாதார நிலைமைகளைக் கவனிப்பதற்கு சுகாதார வைத்திய அதிகாரிகள் பற்றாக் குறையாகக் காணப்படுகின்றனர். இதனால் யாழ்.மாவட்ட சுகாதார நிலைமைகள் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டு வருகிறது.

யாழ்.மாவட்ட சுகாதார நிலைமைகளையும், மேம்பாட்டினையும் கருத்தில் கொண்டு சுமார் 14 வருடங்களாக நிலவி வரும் சுகாதார வைத்திய அதிகாரிகள் வெற்றிடங்களை நிரப்புமாறு யாழ்.மாவட்ட அபிவிருத்தி நல உரிமைச்சங்கம் சுகாதர அமைச்சிடம் கோரிக்கை விடுத்துள்ளது.(33)

## பிரதமருடன் ஜே.வி.பி.ஆலோசனை

(கொழும்பு)

பிரதமர் மகிந்த ராஜபக்ஷவுக்கும் மக்கள் விடுதலை முன்னணியின் பிரமுகர்களுக்குமிடையில் கடந்த திங்களன்று இரவு முக்கிய கலந்துரையாடல் ஒன்று நடந்துள்ளது. இந்தக் கூட்டத்தில் தற்போதைய அரசியல் நிலை தொடர்பாக விரிவாக ஆராயப்பட்டுள்ளது என்றும் கூறப்படுகின்றது.

# மீள்குடியமர்வுக் கொடுப்பனவுகளை விரைவில் வழங்க அரச அதிபர் கோரல்

தென்மராட்சி தெற்குப்பகுதியிலுள்ள அதியுயர் பாதுகாப்பு வலயப்பகுதியில் மீளக்குடியமர்ந்து வருகின்ற மக்களுக்கு மிகவிரைவில் மீள்குடியமர்வு கொடுப்பனவுகளை வழங்குவதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு யாழ். அரசாங்கஅதிபர் பத்மநாதன் அரசிடம் கோரியுள்ளார்.

யாழ். மாவட்ட புனர்வாழ்வு புனரமைப்பு மற்றும் மீள்குடியமர்வு தொடர்பான இணைப்புக்குழு கூட்டமொன்று நேற்று முன்தினம் யாழ். செயலகத்தில் நடைபெற்றது. இதற்கு அரசாங்க அதிபர் தலைமை தாங்கினார். காலை 10.00மணிக்கு ஆரம்பமான இக்கூட்டம் சுமார் மூன்று மணித்தியாலங்கள் நீடித்தது. இதில் பிரதேச செயலர்கள் மற்றும் திணைக்கள தலைவர்கள், அரசசார்பற்ற நிறுவனத்தின் பிரதிநிதிகள் எனபலர் கலந்து கொண்டனர். (24)

# ஆலய திறப்பு விழாவும் வருடாந்த பெருவிழாவும்

(அலுவலகசெய்தியாளர்)

கிளி.கனகபுரம் புனித யூதாதேயு ஆலய திறப்புவிழாவும், வருடாந்த பெருவிழா ஆரம்பமும் இன்று நடைபெறவுள்ளது.

இன்று பிற்பகல் 5.00மணிக்கு யூதாதேயு ஆலய திறப்புவிழா இடம்பெற்று அதனைத் தொடர்ந்து கொடியேற்ற நிகழ்வுடன் வருடாந்த பெருவிழா ஆரம்பமாகி 25ஆம் திகதி காலை 7.00மணிக்கு திருநாள் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

மேற்படி ஆலயம் 1996ஆம் ஆண்டு சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட சத்ஜெய இராணுவ நடவடிக்கையின்போது இராணுவத்தினர் மேற்கொண்ட வான் மற்றும் எறிகணைத் தாக்குதலின் போது முற்றாகச் சேதமாக்கப்பட்டு தற்போது மீண்டும் மக்களால் கட்டப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (சோ)

# திருமலை பொது வைத்தியசாலையில் நவீன சத்திரசிகிச்சைப் பிரிவு திறப்பு

(திருகோணமலை)

வடக்கு - கிழக்குமாகாணத்தில், மாகாண சுகாதாரஅமைச்சின் நிர்வாகத்தின் கீழ் உள்ள வைத்தியசாலைகளில் முதல்தடவையாக திருகோணமலை பொதுவைத்திய சாலையில் 7.5 மில்லியன்ரூபா செலவில் நவீன குளிர்சாதன வசதிகள் பொருத்தப்பட்ட சத்திரசிகிச்சைப்பிரிவு நேற்று முன்தினம்செவ்வாய்க்கிழமை காலை மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் ஆர்.எம்.எஸ். ரத்தினநாயக்கவால் திறந்துவைக்கப்பட்டது.

புதிதாக சத்திரசிகிச்சைப்பிரிவில் பொருத்தப்பட்ட குளிர்சாதன இயந்திரம் தீவிர சிகிச்சைப்பிரிவு மற்றும் சிசுபராமரிப்புக்கான விசேட வாட் ஆகியவற்றிற்கு குளிர்சாதன வசதியை வழங்குகின்றது. இத்திறப்பு நிகழ்வின் போது பேசிய திருகோணமலை பொதுவைத்தியசாலை வைத்திய சுப்பிரிண்டர் டாக்டர் திருமதி நி.ஞானகுணாளன் பேசும் போது "திருகோணமலை வைத்தியசாலையின் வரலாற்றில் இது ஒரு மைல்கல்; திருமலை வைத்தியசாலையில் மனநோய் சிகிச்சை பிரிவு திறக்கப்பட்டுள்ளது. மத்திய மருந்து விநியோகப்பிரிவு ஆரம்பிக்கப்பட்டுள்ளது. சுத்திகரிப்பு, பாதுகாப்பு தனியார் வசம் ஒப்படைக்கப்பட்டுள்ளது என்று தெரிவித்தார்.

மாகாண சுகாதார அமைச்சின் கீழ் திருகோணமலை, வவுனியா, மன்னார் வைத்தியசாலைகள் எல்லாம் பொதுவைத்தியசாலைகளாகத் தரம் உயர்த்தப்பட்டுள்ளன. ஆனால் பெயரளவில் தான் இவை தரம்உயர்த்தப்பட்டுள்ளன. ஜெனரல் ஆஸ்பத்திரிகளுக்குரிய வளங்கள் இன்னும் இவற்றிற்கு வழங்கப்படவில்லை என்றும் மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர். குமாரவேற்பிள்ளை தெரிவித்தார்.

மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் ஆர்.எம்.எஸ். ரத்னாயக்க பேசுகையில் "திருகோணமலை ஜெனரல் ஆஸ்பத்திரியின் தேவைகள் பல. வைத்திய உபகரணங்களுக்கு தட்டுப்பாடு, டாக்டர்களுக்கு விடுதி வசதிஇல்லாமை ஆகியன உள்ளன. இவைஎல்லாம் அரச ஆசிய அபிவிருத்தி வங்கி உலக வங்கி ஆகியவற்றின் நிதிஉதவிகளுடன் எதிர்காலத்தில் நிறைவேற்றப்படக்கூடியவையாகும்" என்று தெரிவித்தார்.

# மன்னார் நகர்ப் பகுதியில் திருடர் தொல்லை அதிகரிப்பு

(மன்னார்)

மன்னாரில் திருடர்களின் தொல்லை அதிகரித்துள்ளது.

மன்னார் நகரப்பகுதியில் பொலிசார் ரோந்து நடவடிக்கையில் ஈடுபடுகின்ற வீதியிலுள்ள நகைக்கடை ஒன்றினுள் கடந்த திங்கள் இரவு கடையின் மேற்கூரையை உடைத்து உட்சென்றதிருடர்கள்வெற்றுக்காசோலைகள் மற்றும் வெள்ளி கொலுசுகள் உட்பட பல பொருட்களை சூறையாடியுள்ளனர்.

இதேவேளை இன்னுமோர் இடத்திலும்உடுப்புகள் உட்பட பல அத்தியாவசியப் பொருட்கள் களவாடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது (மி)

# சபாநாயகர் பதவி தொடர்பில் பிரதான கட்சிகள் அதிகார நோக்கில் செயற்படுகின்றன

## -ஜாதிக ஹெல உறுமய குற்றச்சாட்டு

(கொழும்பு)

நாடாளுமன்ற சபாநாயகர் பதவி தொடர்பில் பிரதான கட்சிகள் இரண்டும் அதிகார நோக்கில் செயற்படுவதாக ஜாதிக ஹெல உறுமய குற்றம் சுமத்தியுள்ளது. நேற்றுமுன்தினம் ஜாதிக ஹெல உறுமயவின் ஊடக மாநாடு கொழும்பில் நடைபெற்றது. இதில் கருத்துரைத்த பிக்குமார் அர்ஜுனா ரணதுங்கவின் அமைச்சு விடயத்தில் தம்மை தொடர்புபடுத்துவதை ஏற்றுக் கொள்ள முடியாது எனக் கூறினர். கருணாவின் விடயத்தில் அரசாங்கம் விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனின் தரப்புக்கு சார்பாக நடந்து கொண்டது. பாதுகாப்பு படையினரின் உதவியுடனேயே பிரபாகரனின் படையினர் கருணாவின் படையை தோற்கடிக்க கிழக்குக்கு வந்ததாக கூறிய ஜாதிக ஹெல உறுமயவின் பிக்குமார், அரசாங்கம் பயங்கரவாதத்திற்கு எதிராக செயற்படும் அரிய வாய்ப்பை இதன் மூலம் தவறவிட்டதாக தெரிவித்தனர். இந்த விடயம் குறித்து முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவோ அல்லது மக்கள் விடுதலை முன்னணியினரோ கருத்துக் கூறாமை கண்டிக்கத்தக்கது என குறிப்பிட்டனர். கம்பஹாவில் தெரிவான தமது நாடாளுமன்ற உறுப்பினரை ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியினர் ஒளித்து வைத்துள்ளதாகவும் அவர்கள் குற்றம் சுமத்தினர்.

அரசியல் அமைப்பு சீர்திருத்தம் தற்சமயம் அவசியம் இல்லையெனவும் பிக்குகள் கூறினர். (32)

# நிர்வாகிகள் தெரிவு

(அலுவலக செய்தியாளர்)

இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தின் இத்தாவில் வேம்பொடுகேணி அலகு கிளைக்கான நிர்வாகத் தெரிவு பளை பிரதேச செயலர் பிரிவு கிளைத்தலைவர் ந. கார்த்திகேசு தலைமையில் இடம்பெற்றது.

இத்தாவில் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலையில் நடைபெற்ற இந்நிகழ்வில் சிறப்பு விருந்தினர்களாக கிளிநொச்சி மாவட்ட இலங்கைச் செஞ்சிலுவைச்சங்க கிளை செயலாளர் கே.கணேஸ், பொருளாளர் டாக்டர் கே.வி.கே. திருலோகமூர்த்தி ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்கள். இவ் அலகு கிளையின் நடப்பு நிர்வாகிகளாக பின்வருவோர் தெரிவானார்கள். தலைவர் ந.கார்த்திகேசு, செயலாளர் இ.உதயா, பொருளாளர் அ.மனோரஞ்சிதம், இவர்களுடன் அ.தவராசா, ந.திலீபன், பா.பாமினி, சந்குலேஸ்வரி, கி.சரஸ்வதி, சி.தவராணி, ஆகிய ஐவரும் நிர்வாகசபை உறுப்பினர்களாக தெரிவாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (சோ)

# வேலணையில் வதிவிட பாஸ் நடைமுறை சிறிலங்கா கடற்படையால் மீண்டும் அமுல்

யாழ். தீவகத்தில் உள்ள வேலணைப் பகுதியில் கடற்படையினர் வதிவிட பாஸ் நடை முறைகள் குறித்து அறிவித்து வருகின்றனர்.

கடந்த சில நாட்களாக கடற்படையினர் இந் நடவடிக்கைகளை ஆரம்பித்திருக்கின்றனர். மேற்படி பகுதிகளில் வசித்து வரும் அனைவரும் வதிவிடப் பாஸ்களைப் பெற்றிருத்தல் வேண்டும் எனவும், பாஸ்களைப் பெறாதவர்கள் வீடுகளில் தங்கமுடியாது எனவும், வதிவிடப்பாஸ்களை பெறாது வீடுகளில் இரவு வேளைகளில் தங்குவோர் தேடுதல்கள் மூலம் பிடிக்கப்பட்டு விசாரணைகளுக்கு உட்படுத்தப்படுவர் எனவும் படையினர் அறிவுறுத்தி வருகின்றனர்.

இந் நடைமுறை மேற்படி வேலணை,கடற்கரை பகுதிகளையும், இராணுவ பாதுகாப்பு வலயங்களையும் அண்மித்த பகுதி வாழ் மக்களுக்கு உடனடியாகவே அமுல் செய்யப்பட்டு வருவதாகவும், படிப்படியாக இது வேலணை முழுவதிலும் அறிமுகப்படுத்தப்படும் எனவும் தெரிய வருகிறது. யுத்த நிறுத்த காலத்திலும் படையினர் செய்யும் இந் நடவடிக்கைகள் அப்பகுதி மக்களிடத்தே பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. (33)

# சிறு தேயிலைத் தோட்டத் துறையை அபிவிருத்தி செய்ய முயற்சி

இலங்கையின் சிறு தேயிலைத் தோட்ட துறையை அபிவிருத்தி செய்யும் விசேட திட்டமொன்றை நடைமுறைப்படுத்த ஆசிய அபிவிருத்தி வங்கி முன்வந்துள்ளது.

தோட்டத்தொழில்துறை அமைச்சினதும், தேயிலை அபிவிருத்தித் திட்டத்தினதும் ஏற்பாட்டின் கீழ் சிறு தேயிலைத் தோட்டத்துறையை அபிவிருத்தி செய்யும் முகமாகவே ஆசிய அபிவிருத்தி வங்கி பிரஸ்தாப கடன் உதவியை வழங்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

பதுளை,மாத்தறை,காலி, நுவரெலியா, கண்டி, இரத்தினபுரி, கேகாலை, மாத்தளை,களுத்துறை போன்ற மாவட்டங்களைச் சேர்ந்த சிறு தேயிலைத் தோட்டங்கள் மேற்படி கடன் உதவித்திட்டத்தின் கீழ் அபிவிருத்தி செய்யப்படும்.

சிறு தேயிலைத் தோட்ட உரிமையாளர்களுக்கு குறைந்த வட்டி அடிப்படையில் வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

# சட்ட விரோத மணற் கொள்ளையை தடுக்க யாழ். நீதவான் கடும் உத்தரவு

யாழ். மாநகர சபை எல்லைக் குட்பட்ட அரியாலைப் பகுதியில் சட்ட விரோத மணற்கொள்ளை தொடர்கின்ற நிலையில், இவ்வாறான மணற் கொள்ளையில் ஈடுபடும் வாகனங்களை நீதிமன்று பறிமுதல் செய்ய வேண்டி வரலாமென யாழ். நீதவான் இ.த. விக்கினராஜா எச்சரித்துள்ளார்.

நேற்று முன்தினம் இவ்வாறாக உரிய அனுமதிப் பத்திரமின்றி மணலை ஏற்றிச் சென்றதாகத் தெரிவிக்கப்படும் 14 வாகனங்களை யாழ். நகரப் பொலிசார் யாழ். நீதிமன்றில் ஆஜர் செய்தனர்.

அவ்வேளையில் மணல் களவு மற்றும் அனுமதிப் பத்திரமின்றி மணல் ஏற்றிய குற்றச் சாட்டுக்களின் பேரில் தலா ஐயாயிரம் ரூபா குற்றப் பணம் வீதம் செலுத்த உத்தரவிட்ட நீதவான், வாகனங்களை யாழ். பொலிஸ் நிலைய பாதுகாப்பில் வைக்கவும் உத்தரவிட்டார்.அத்துடன் குறித்த வாகன உரிமையாளர்கள் தத்தமது பகுதி கிராம சேவையாளர்கள் மற்றும் பிர தேச செயலருடாக இவ்வாறாக உரிய அனுமதிப்பத்திரமின்றி மணலை எதிர்வரும் காலப்பகுதியில் ஏற்றமாட்டோமென்ற உறுதியினையும் நீதிமன்றில் சமர்ப்பித்தே வாகனங்களை மீளப் பெற்றுக் கொள்ள முடியுமெனவும் அறிவித்துள்ளார்.(27)

## -தேர்தல் காலத்தில்-

# 169 பொய்க் குற்றச்சாட்டுக்களை சுமத்தியவர் மீது விசாரணை!

(கொழும்பு)

கடந்த பொதுத் தேர்தலின் போது மத்திய மாகாணத்தில் மாத்திரம் தனி ஒருவர் 169 பொய் குற்றச்சாட்டுகளை பொலிசாரிடம் தெரிவித்திருப்பதாக பொலிஸ்மா அதிபர் இந்திராடிசில்வா தெரிவித்தார்.

இது தொடர்பில் விசாரணைகள் இடம் பெறுவதாக அவர் குறிப்பிட்டார். கடந்த தேர்தலின் போது மேற்கொள்ளப்பட்ட முறைப்பாடுகள் சம்பந்தமாக சட்டமா அதிபரின் உதவி நாடப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார். போதைவஸ்து மற்றும் சட்ட விரோத ஆயுதங்கள் தொடர்பில் அதனைக் கண்டுபிடித்து கொடுப்போருக்கு சன்மானம் வழங்கப்படவிருப்பதாகவும் பொலிஸ்மா அதிபர் தெரிவித்தார்.



## சிந்தனைக்கு

தமிழ் மக்களின் போராட்டம் தன்னாட்சி உரிமையை வென்றெடுப்பதற்கான போராட்டம்; தமது அரசியல் தலைவிதியை தாமே நிர்ணயித்துக் கொள்ளும் அரசியல் சுதந்திரத்திற்கான போராட்டம்.

தமிழீழத்தேசியத் தலைவர்.

ஈழநாதம்
மக்கள் நாளிதழ்
யாழ். சாலை, கிளிநொச்சி. 22-04-2004

## முதல் சவால்!

சிறிலங்கா பாராளுமன்றத்தில் இன்று நடைபெறவுள்ள சபாநாயகர் தெரிவு சிறுபான்மை ஐக்கிய மக்கள் விடுதலை முன்னணி அரசாங்கம் சந்திக்கும் முதல் சவாலாக இருக்கும். எதிர்கட்சியான ஐ.தே.கட்சி சபாநாயகருக்கு வேட்பாளரை நிறுத்தியுள்ள நிலையில் அறுதிப்பெரும்பான்மைக்கான ஆதரவை ஆளும்கட்சி இன்னமும் பெற்றுக்கொள்ளாமல் இருப்பதே இச்சவாலுக்குக் காரணமாகும்.

புதிய சபாநாயகர் தெரிவைப் பெரும்பாலும் தீர்மானிக்கும் சக்தியாக ஜாதிக ஹெலஉறுமய கட்சியே இருக்கும் எனப் பொதுவாக எதிர்பார்க்கப்படுகின்றது. இக்கட்சியின் ஆதரவு கிடைக்கப்பெறும் கட்சியின் வேட்பாளர் சபாநாயகராகத் தெரிவு செய்யப்படுவார் எனப் பரவலாக எதிர்பார்க்கப்படுகின்றது. ஆனால் ஜாதிகஹெல உறுமய இன்னமும் யாரை ஆதரிக்கப் போகின்றது என்பதை உறுதிபடக்கூறவில்லை. சிலவேளைகளில் நடுநிலை வகிக்கப்போவதாகவும் அது கூறிக்கொள்கின்றது.

ஆகையினால் 105+1என்ற ரீதியில் 106 ஆசனங்களுடன் ஐ.ம.சு. முன்னணியும், 76+9 என்ற ரீதியில் 85 ஆசனங்களுடன் ஐ.தே.கட்சியும்சபாநாயகர் தேர்தலை எதிர் கொள்ளத் தயாராகவுள்ளன. ஆகையினால் ஐ.ம.சு.முன்னணிக்கு இன்னமும் ஏழு ஆசனங்களும் ஐ.தே.கட்சிக்கு இன்னமும் 28ஆசனங்களும் தேவையாக உள்ளன. இதில் ஐ.தே.கட்சி சார்பில் சபாநாயகர் தெரிவுசெய்யப்படுவதானால் தமிழர் தேசிய கூட்டமைப்பின் ஆதரவும் அதற்கு அவசியமானதாகும்.

ஆகையினால் தமிழர் தேசியக்கூட்டமைப்பு ஐ.தே.கட்சிக்கு எதிராக வாக்களித்தாலோ அன்றி வாக்களிப்பில் கலந்து கொள்ளாதுபோனாலோகூட ஐ.தே.கட்சி சார்பில் சபாநாயகர் பதவிக்கு நிறுத்தப்படுபவர் தோல்வியடைவது தவிர்க்க முடியாததாகவே இருக்கும்.

இதேவேளை தமிழர் தேசியக்கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்கள் ஐ.தே.கட்சிக்குச் சார்பாக வாக்களிக்கும் பட்சத்தில் ஹெலஉறுமய ஐ.தே.கட்சிக்கு சார்பாக வாக்களித்தாலோ அன்றி வாக்களிப்பில் கலந்து கொள்ளாது போனாலோ கூட ஐ.தே.கட்சி வேட்பாளருக்கு வெற்றி வாய்ப்பு அதிகம் உள்ளது என்றே கொள்ளலாம்.

இச்சபாநாயகர் தெரிவானது பெரும்பாலும் ஐ.ம.சு. முன்னணி அரசாங்கத்தின் எதிர்காலத்திற்கு கட்டியம் கூறும் ஒன்றாகவே இருக்கும். இன்றைய நிலையில் இலங்கை யின் அரசியல் எதிர்காலம் ஸ்திரமற்றதொரு தன்மையைக் கொண்டதாகவே இருக்கும் என்பது இலகுவில் எதிர்வு கூறத்தக்கதொன்றே. ஆயினும் சபாநாயகர் தெரிவானது இந்த அரசாங்கத்தின் பதவிக்காலத்தையும், சிறிலங்கா அரசியலில் ஏற்படக்கூடிய குழப்பத்தையும் இலகுவில் வெளிக்காட்டத்தக்கதாக இருக்கும் என்பதில் சந்தேகத்திற்கு இடமில்லை.

சனாதிபதி தலைமையிலான ஐ.ம.சு.முன்னணியின் புதிய அமைச்சரவை அமைந்துள்ள போதும் இதுவரையில் அமைச்சரவையைக் கூட்டமுடியாததொரு நிலையே காணப்படுகின்றது. அதாவது ஐ.ம.சு.முன்னணியின் முக்கிய பங்காளிகளில் ஒரு தரப்பான ஜே.வி.பி.யுடன் அமைச்சரவைப் பகிர்வில் இணக்கப்பாடு ஒன்றை சனாதிபதியால் காணமுடியாதுள்ளது. பல சுற்றுப்பேச்சுவார்த்தைகள் சமரச முயற்சிகள் என்பன இடம்பெற்றும் அது சாத்தியமாகவில்லை.

இந்நிலையில் இன்று நடைபெறும் சபாநாயகர் தெரிவில் ஐ.ம.சு.முன்னணி அரசாங்கத்தின் பிரதிநிதி தோல்வியடைவாரேயானால் பாராளுமன்றத்தையே கூட்டமுடியாததொரு நிலையே அரசாங்கத்திற்கு ஏற்படக்கூடும் ஏனெனில் பாராளுமன்றத்தில் பெரும்பான்மையை நிரூபிப்பதென்பது அதற்குச் சாத்திய மற்றுப் போகலாம்.

இந்நிலையில் ஐ.ம.சு.முன்னணி அரசாங்கம் முழுவதுமாகச் சனாதிபதி சந்திரிகாவையே நம்பியிருக்க வேண்டியதொரு நிலையே உருவாகக் கூடும். அதாவது பாராளுமன்றத்தைக் கலைக்காது பார்த்துக்கொள்வதற்கும் பாராளுமன்றத்தைக் கூடாது பார்த்துக் கொள்வதற்கும் சனாதிபதின் ஒத்துழைப்பு அவர்களுக்கு அவசிய தேவையாக இருத்தல் கூடும்.

ஆகையினால், இன்றைய சபாநாயகர் தேர்தலானது ஐ.ம.சு.முன்னணி அரசாங்கத்தின் எதிர்காலம் குறித்து சில முடிவுகளுக்கு வருவதற்கு உதவக்கூடும். ஆனால் சபாநாயகராக எக்கட்சியைச் சேர்ந்தவர் நியமனம் பெற்றாலும் சிறிலங்கா அரசியலில் இன்று காணப்படும் ஸ்திரனமற்ற நிலைமை மாற்றம் காணப்போவதில்லை. இதேவேளை ஐ.தே. கட்சியைச் சேர்ந்தவர் சபாநாயகராகத் தெரிவு செய்யப்படும் பட்சத்தில் சிறிலங்கா அரசியல் இன்றைய நிலையைவிட மேலும் நெருக்கடிகளையும், சிக்கல்களையும்உடையதாக மாற்றம் காண்பது தவிர்க்க முடியாததாகவே இருக்கும்.

## மீண்டது ஆனையிறவு

ஆயிரமாயிரம் வீரர்களின்
அயராத போராட்டத்தில்
மீண்டது ஆனையிறவு-அதன்
நாலாண்டு நிறைவு இன்று.

அன்று,
விரைந்தது புலிகள் படை
வெருண்டது எதிரி படை
வியந்தது உலகம் ஒருமுறை
பிறந்தது தமிழ் மண்ணில்விடுதலை

அன்னியனின் கைப்பிடியில்
அழகிழந்து வாழ்நின்ற
ஆனையிறவு மண்ணை மீட்கும்

அருமையான பணியினிலே
மாண்டு விட்ட வீரர்களே
உம் காதில் ஒரு செய்தி

மாவீரர் தியாகம் ஒரு போதும்-எம்
மனதை விட்டுப்போவதில்லை
மலர்ந்து வரும் தமிழீழம்
உமை மறக்கப் போவதில்லை

தாய் மண்ணின் கண்ணீரை
உம்முயிரால் துடைத்து விட்டீர்
என்றென்றும்எம் மனதில்
நிலையாகப் பதிந்து விட்டீர்

க.கவிதா

# தமிழீழ தேசியத்தை உறுதியோடு வளர்த்தெடுக்க திடசங்கற்பம் பூணுவோம்

### மட்டு. அம்பாறை இராணுவ புலனாய்வுப் பொறுப்பாளர் அழைப்பு

கடந்த காலங்களில் தமிழீழ தேசிய கொள்கைக்கு ஏற்ற முறையில் நிர்வாகங்கள் இங்கு நடைமுறைப் படுத்தமுடியாமல் இருந்தது. ஆனால் இன்று அவ்வாறு இல்லை. எமது தலைவரின் நேரடிக்கண்காணிப்பில் தமிழீழ தேசிய கொள்கைக்கு ஏற்றவாறு இங்கு இனிமேல் நடைமுறைப் படுத்தப்படும். அந்த நிர்வாகங்களை நல்ல முறையில் நடைமுறைப்படுத்த நாம் ஒத்துழைத்து எமது தேசியத்தை உறுதிபட வளர்த்தெடுக்கவேண்டும்.

இவ்வாறு வேண்டுகோள் விடுத்து மட்டு அம்பாறை இராணுவப் புலனாய்வுப்பிரிவுப் பொறுப்பாளர் ரமணன் அன்னைபூபதியின் 16வது ஆண்டு நினைவு நாளில் கலந்து கொண்டு சிறப்புரைஆற்றுகையிலேயே அவர் இவ்வாறு வேண்டுகோள் விடுத்தார்.

அவர் அங்கு மேலும் உரையாற்றுகையில் மக்கள் தான்புலிகள் புலிகள்தான் மக்கள் தமிழீழ விடுதலைப்புலிகள் தான் எமது ஏகபிரதிநிதிகள் என்ற கொள்கையில் இந்த தேர்தலில் போட்டியிட்ட தமிழ் கூட்டமைப்பை வெல்ல வைத்த மக்களுக்கு எனது நன்றியினை தெரிவித்துக் கொள்கிறேன் இன்று சர்வதேசத்திற்கும் அந்த உண்மையை உறுதியாக தெளிவுபடுத்தியுள்ளார்கள்.

எமது தலைமைப்பீடம் பேச்சு வார்த்தையூடாக சமாதான வழிமுறையில் எமது உரிமைகளை வென்றெடுக்க கவனமாக காய்களை நகர்த்தி வருகின்றது.

ஆனால் இன்றைய தென்னிலங்கை அரசியல் நிலவரம் ஊசலாடிக் கொண்டிருக்கின்றது. இன்று மடிந்து விடுமோ நாளை மடிந்து விடுமோ என்ற கேள்விக்குறியும் உள்ளது இருந்தும் யுத்தமா? சமாதானமா? என்பது தென்னிலங்கை அரசியல் கைகளில் தான் உள்ளது.

எமது தேசியத்தலைவர் எமது மக்கள் மீதும் மண் மீதும் பெரும்பற்றுக்கொண்டுள்ளார் அது போலவே எமது மக்கள் தேசியத் தலைவர்மீதும் எமது தேசியத்தின் மீதும் பெரும் பற்று வைத்திருப்பதை நன்கு உணர்கின்றோம். இதற்கு உதாரணமாக கடந்த சில நாட்களாக இங்கு நடந்த சம்பவங்களை நினைவு கூறுகிறேன். எமது தேசத்திற்கெதிராக நடாத்தப்பட்ட அந்த நிகழ்வில் பெரும் இரத் தக்களரி ஏற்படலாம் என்று பலரும் எதிர்பார்த்தார்கள். எமது உடன்பிறப்புக்களை வெளியேற்றும் போது கைகட்டி சிரித்தார்கள். வெடி கொளுத்தினார்கள் ஆனால் எமது தேசியத்தலைவர் நிதானமாக சிந்தித்து பொறுமையாக வியூகம் அமைத்தார் இப்பிரச்சினையை இரத்தம் சிந்தாமல் மீட்டெடுத்த பெருமை எமது தேசியத் தலைவரையே சாரும் என குறிப்பிட்டார்.

தொடர்ந்தும் எம் நினைவு ஆலயத்தில் அன்னை பூபதியைப் பற்றியும் மாவீரர்கள் பற்றியும் நினைவு கூறுவது எமது போராட்டத் திற்கு மேலும் உரம் ஊட்டுவதாக அமையும் அன்னையின் இலட்சியத்தை பின்பற்றி அன்னையர் முன்னணி செயற்பட்டு வருகிறது அவர்களது பாராட்டத்தக்க சேவை தமிழீழ மண்ணிற்கு தேவை அவர்களுக்கு நாமும் ஒத்துழைப்பு நல்க வேண்டும் எனவும் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

# ரயில்வே அதிகார சபை திணைக்களமாக மாறும்

### புதிய அமைச்சர் அறிவிப்பு

(கொழும்பு)

தற்போது நடைமுறையில் இருக்கும் ரயில்வே அதிகார சபையை உடனடியாக ரத்துச் செய்து ரயில்வே திணைக்களத்தைப் புனரமைத்து மக்களுக்கு சிறந்த சேவையைப் பெற்றுக் கொடுப்பதே எனது புதிய திட்டம் என போக்குவரத்து அமைச்சர் பீ ஸ் பெரேரா அறிவித்துள்ளார்.

எதிர்காலத்தில் ரயில்வே தொழில் நிறுவனத்தின் அனுசரணையுடன் புதிய திட்டங்களை அமுல்படுத்தப் போகிறேன் என அமைச்சர் மேலும் கூறியுள்ளார்.

1-வது ஒருநாள் போட்டியில்

# சிறீலங்கா 6 விக்கெட்டுக்களால் வெற்றி

சிம்பாப்வேயில் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள சிறிலங்கா கிரிக்கெட் அணிக்கும் சிம்பாப்வே அணிக்கும் இடையில் நேற்று முன்தினம் புலவோயாவில் நடைபெற்ற முதலாவது ஒருநாள் போட்டியில் சிறிலங்கா 6விக்கெட் வித்தியாசத்தில் சிம்பாப்வேயை வென்றுள்ளது.

இப்போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய சிம்பாப்வே அணி நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவர்களில் 6விக்கெட்டுக்களையிழந்து 211ஓட்டங்களைப் பெற்றது. அணியின் புதிய தலைவரும் இளம்வீரருமான டடென் டாதைபு 96 ஆட்டமிழக்காது ஓட்டங்களைப்பெற்றது சிறப்பம்சமாகும்.

பதிலுக்கு சிறிலங்கா அணி விளையாடிக்கொண்டிருந்தபோது மழை குறுக்கிட ஆட்டம் சுமார் ஒரு மணித்தியாலம் தடைப்பட்டது. பின்னர் 33ஓவர் 133 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற 'டக்வர்த்லூயிஸ்' முறையறிவிக்கப்பட்டு ஆட்டத்தைத் தொடர்ந்த சிறிலங்கா அணி 4விக்கெட்டுக்களையிழந்து 26ஓவரில் 133 ஓட்டங்களைப் பெற்ற போது வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டது.

## பெண்கள் கிரிக்கெட் தொடர் இந்திய அணி முன்னணியில்

"சிங்கர்" ஆசியக்கிண்ணத்துக்காக கொழும்பில் நடைபெறும் பெண்களுக்கான ஒருநாள் கிரிக்கெட் போட்டித் தொடரின் 2வது போட்டியிலும் இந்தியா வெற்றிபெற்றுள்ளது.

இப்போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி 50ஓவர் முடிவில் 5விக்கட்டுக்களையிழந்து 189 ஓட்டங்களைப் பெற்றது. அவ்வணியில் மைதிலி 48 ஓட்டங் களைப் பெற்றார்.

பதிலுக்கு 190 ஓட்டங்கள் என்ற வெற்றி இலக்குடன் ஆடிய சிறிலங்கா மகளிர் அணி 44.3 ஓவர்களில் 84 ஓட்டங்களை மட்டுமே பெற்று தோல்வியடைந்தது.

இந்திய அணியின் அருந்ததி 3விக்கெட்டுக்களையும் ஜவலான் நுஷின் ஆகியோர் தலா இரண்டு விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

இப்போட்டித் தொடரில் பாகிஸ்தான் மகளிர் அணி கலந்து கொள்ளவிருந்த



# ஐ.ம.சுதந்திர முன்னணி அரசின் அமைச்சரவை நேற்றுக் கூடியது

## -பல தீர்மானங்களும் நிறைவேற்றம்

(கொழும்பு)

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் முதலாவது அமைச்சரவைக்கூட்டம் நேற்று நடைபெற்றது சனாதிபதி செயலகத்தில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

மக்கள் விடுதலை முன்னணியைச் சேர்ந்த நால்வரும் மகாவலி அமைச்சு தொடர்பான முறுகல் காரணமாக இன்னும் அமைச்சுப்பதவிகளை ஏற்றுக் கொள்ளாமையால் நேற்றைய அமைச்சரவைக் கூட்டத்தில் பங்கேற்கவில்லை.

இதேவேளை நேற்றைய கூட்டத்தில் அமைச்சர்களின் உறவினர்களை அமைச்சுக்களின் முக்கிய பதவிகளுக்கு நியமிப்பதில்லை தேர்தலில் தோல்வியடைந்தவர்களை அரசாங்கத்திணைக்களத் தலைமைப் பதவிகளுக்கு நியமிப்பதில்லை. போன்ற தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன அத்துடன் அரசாங்க கேள்விப் பத்திரம் கோரப்படும்போது அமைச்சரவை உபகுழுவின் அனுமதி பெறப்படல் வேண்டும். என்ற தீர்மானமும் நேற்றைய அமைச்சரவைக் கூட்டத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

நிதி அமைச்சர் சரத் அமுனுகம நாட்டின் நிதி நிலைமை தொடர்பாக விளக்கம் ஒன்றை நேற்று வழங்கினார். இதன் அடிப்படையில் நாட்டின் நிதி நிலைமை தொடர்பாக ஆழமாக ஆராய்வது என நேற்றைய அமைச்சரவைக் கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டது அமைச்சரவை பேச்சாளராக தகவல்துறை அமைச்சர் ரெஜினோல்ட் குரே நியமிக்கப்பட்டார் எனினும் அமைச்சரவையின் முடிவுகளை இவர் வெளியிடும் முன்னர் சனாதிபதியால் நியமிக்கப்பட்ட குழுவுடன் ஆராய வேண்டும் எனவும் முடிவு எடுக்கப்பட்டது இந்தக் குழுவில் பிரதம மந்திரி மஹிந்த ராஜபக்ஷ அமைச்சர்களான பேரியல், அஷ்ரப், டக்ளஸ் தேவானந்தா, சரத், அமுனுகம, மங்கள சமரவீர, ஏ.எல்.எம் அதாவுல்லா ஆகியோர் அடங்கியுள்ளனர்.

# சபாநாயகர் தெரிவில் ரகசிய வாக்கெடுப்பு இல்லை

(கொழும்பு)

பாராளுமன்றத்தில் புதிய சபாநாயகர் உதவிசபாநாயகர் பாராளுமன்ற செயற்குழு தலைவர் தேர்தலின் பொழுது ரகசிய வாக்கெடுப்பு நடத்தப்படமாட்டாது என பாராளுமன்ற வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

மேற்கூறப்பட்ட தெரிவுகளின் பொழுது பாராளுமன்ற அங்கத்தவர்களின் பெயர்கள் கையொப்பத்துடன் இருத்தல் வேண்டும் எனவும் தேர்வு படிவத்தில் அவர்களின் கையொப்பம் இல்லாவிட்டால் அந்தப்படிவம் நிராகரிக்கப்படும் என தேர்வு அதிகாரி தெரிவித்துள்ளார்.

இன்று காலை கூடும் சிறிலங்காவின் 13 ஆவது பாராளுமன்றத்தின் முதலாவது கூட்டத் தொடரில் நிகழ்ச்சிநிரலில் முதலாவது நிகழ்வாக சபாநாயகர் தெரிவு இடம் பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கதாகும்.

# த.கூட்டமைப்பினர் பாரம்பரிய உடையுடன் இன்றுபாராளுமன்றம் செல்கின்றனர்

தமிழரசுக் கட்சியின் சார்பில் தெரிவு செய்யப்பட்டுள்ள 22 நாடாளுமன்ற உறுப்பினர்களும் நாளை நடைபெறவிருக்கும் முதலாவது நாடாளுமன்ற அமர்விற்கு போகும் போது தமிழரின் பாரம்பரியத்தை எடுத்துக்காட்டும் வகையில் உடைகள் அணிந்து செல்லவிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது. தமிழர்களுக்கு என்று தனியான ஒரு பாரம்பரியமும், கலாசாரமும் இருக்கின்றது. இதனை வெளிக்காட்டும் வகையிலும், தமிழர்களின் சுயநிர்ணய உரிமை தனித் தேசிய இனம் தன்னாட்சி உரிமை என்பவற்றை முன்வைத்து தாம் இந்தத் தேர்தலில் போட்டியிட்டு 22 ஆசனங்களைப் பெற்றிருப்பதாகவும், எனவே தமிழர்களின் பாரம்பரியத்தை வெளிப்படுத்தும் வகையில் நாடாளுமன்றம் செல்லவிருப்பதாக தமிழரசுக் கட்சியின் முக்கியஸ்தகர் ஒருவர் தெரிவித்தார்.



ஈராக்கின் பஸ்ரா நகரில் நேற்று பொலிஸ் நிலையம் ஒன்றின் முன்னால் நடைபெற்ற கார்க்குண்டு வெடிப்பு

# முரளியின் பந்துவீச்சு விதிகளுக்கு முரணானதென ஐ.சி.சி.தெரிவிப்பு



சிறிலங்காவின் நட்சத்திர சுழல் பந்து வீச்சாளர் முத்தையா முரளிதரனின் பந்து வீச்சில் பொதுவான சுழல் பந்து வீசசுக்கு முரணானது என சர்வதேச கிரிக்கெட் கவுன்சில் (ஐ.சி.சி) அறிவித்துள்ளது.

பொதுவாக சுழல்பந்து வீச்சாளர்கள் ஐந்து பாகைக்கே தமது முணங்கையை வளைக்கமுடியும் முரளிதரனோபத்து பாகைக்கு மேல் முணங்கையை வளைப்பது கண்டறியப்பட்டுள்ளது எனவே அதனை மாற்றி அமைக்கவேண்டும் என ஐ.சி.சியின் நிறைவேற்றுக்குழு தலைவர் மல்கம் ஸ்ரீட் தெரிவித்துள்ளார்.

இதேவேளை முரளி மீது மீண்டும் குற்றச்சாட்டு சுமத்தப்படும் பட்சத்தில் ஒருவருட தடைக்கு உட்படுத்தப்படுவார் எனவும் அவ் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

இது இவ்வாறிருக்க இது ஒரு சதித்திட்டம் எனத் தெரிவித்துள்ள கிரிக்கெட் வர்ண்ணனையாளர் ஒருவர் இதனை தோற்கடிக்க ஆசிய கிறிக்கெட் சபையின் உதவி அவசியம் எனத் தெரிவித்துள்ளார்.

# ஆட்டோ – வான் விபத்தில் உயிரிழந்தவர் அடையாளம் காணப்பட்டார்

(கிளிநொச்சி)

ஏ-9 வீதியில் மாங்குத்துக்கும் கனகராஜன் குளத்துக்கும் இடையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஆட்டோ-வான் விபத்தில் உயிரிழந்தவர் டென்மார்க்கில் வசித்து வந்த அராலி தெற்கு யாழ்ப்பணத்தை சேர்ந்த முத்தையா சற்குணம் (58 வயது) என அடையாளம் காணப்பட்டுள்ளது.

இவ்விபத்தில் நகுலேஸ் வரன் (வயது 38) யோகநளாயினி (வயது 23) சிந்துஜா(வயது-3)அப்புத்துரை விஜயகுமார் (வயது 23)இந்திரகுமாரி காயத்திரி(வயது 14)ஆகியோர் காயமடைந்து வவுனியா வைத்திய சாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

# மாவீரர் காவேரி நினைவாக கரப்பந்தாட்டச் சுற்றுப்போட்டி

(யாழ்ப்பாணம்)

மாவீரர் காவேரியின் நினைவாக நடத்தப்பட்டு வரும் கரப் பந்தாட்டச் சுற்றுப்போட்டி நிகழ்வுகள் நாளை மறுதினம் (24.04.2004) வடமராட்சி அல்வாயில் உள்ள இளங்கோவன் விளையாட்டு மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

தமிழீழ விளையாட்டுத்துறையின் அனுசரணையில் இடம்பெறும் இந்நிகழ்வுகளில் தமிழீழ விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் பாப்பா, வடமராட்சி அரசியல் துறைப்பொறுப்பாளர் தயா வடமராட்சி அரசியல் துறை மகளிர் பொறுப்பாளர் வர்ணா ஆகியோர் உட்பட போராளிகள் பொது மக்கள் எனப்பலரும் கலந்து கொள்ளவுள்ளனர்.

இப்போட்டிகளில் யாழ்குடாநாட்டின் பல பாகங்களிலும் இருந்து தலை சிறந்த விளையாட்டுக்கழகங்கள் பங்குபற்றுகின்றன. (33)

### சபாநாயகர்...

மாக கொண்டுவரும் மசோதாவை பாராளுமன்றத்தில் ஏற்பதா இல்லையா இது சம்பந்தமாக சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்படுவது போன்ற பல பிரச்சினைகள் சபாநாயகரின் தீர்மானத்தில் தங்கி உள்ளதென ரத்தின தேரர் குறிப்பிட்டுள்ளார்.

### ஜா.ஹெல....

பெற்றுள்ளார். எனினும் இவர் களிருவரும்வேட்புமனுத் தாக்கல் செய்த பின் ஜாதிகஹெலஉறுமயவின் கொள்கைகளை புறந்தள்ளிவிட்டு இராஜினாமாவைச் செய்திருந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாராளுமன்ற மரபுகளின்படி தெரிவு செய்யப்படும் ஒரு உறுப்பினர் தேர்தலுக்கு முன்பாக இராஜினாமாவைச் செய்யுமிடத்து அவர் தனது ஆளடையாளத்தை பொதுச்செயலாளரிடம் நிருபிக்க வேண்டும் எனினும் இவர்கள் தவறிவிட்டனர்.

இதற்கிடையில் அக்கட்சியின் பிரச்சார செயலாளர் வண உடுவே தம்மாலோக தேரர் இவர்களை யாரோ அரசியல் தேவைகளுக்காக மறைத்துவைத்திருப்பதாக தெரிவித்துள்ளார்.

பொதுச் செயலாளர் இவர்களின் இராஜினாமாக்கடிதத்தை ஏற்கும் போது அதனைத் தேர்தல் ஆணையாளருக்கு அறிவிக்கவேண்டும் அல்லது அவர்கள் தேர்தலில் வெற்றி பெற்றது அல்லது தேசியப்பட்டியல் மூலம் நியமிக்கப்பட்டது பற்றிவர்த்தமானிமூலம் அறிவிக்கவேண்டும் இந்த நிலைமைகளால் பாராளுமன்ற உயர் அதிகாரிகளின் மட்டத்தில் குழப்ப நிலை தோன்றியுள்ளது.

### ஐ.ம.சு....

ஜாதிக ஹெல உறுமய விடுத்துள்ளது இது தொடர்பில் நேற்று முன்தினம் சனாதிபதியுடனும் தமது பிக்குமார் பேச்சு வார்த்தை நடத்தியதாக அந்த கட்சி கூறியுள்ளது இதேவேளை சனாதிபதி இந்த சந்திப்பின் போது சபாநாயகர் பதவியில் போட்டியிடும் ஐக்கிய மக்கள் சுதந் திர முன்னணியின் உறுப்பினருக்கு ஆதரவு தருமாறு கேட்டுள்ளார் எனினும் இது தொடர்பில் 22.ஆம் திகதியே முடிவெடுக்கப் போவதாக பிக்குமார் தெரிவித்துள்ளனர். இது இவ்வாறிருக்க ஐக்கிய தேசிய கட்சியின் கரு ஜெயசூரியா மற்றும் சபாநாயகர் பதவிக்கான போட்டியாளர் டபிள்யு ஜே.எம். லொக்குபண்டார ஜாதிகஹெல உறுமயவை சந்தித்துள்ளனர். இதனை யடுத்து அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவும் ஜாதிக ஹெல உறுமயவை சந்தித்து ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் சபாநாயகருக்கான போட்டியாளரை ஆதரிக்குமாறு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

### 13வது...

ஒன்றை உருவாக்கியிருப்பதாகவும், இக்கடத்தல் குறித்து அரசாங்கத்தையே ஜாதிக ஹெல உறுமய சந்தேகிப்பதினால் இவ்விரு தரப்பினர் இடையே நிலைமை மோசமடைந்துள்ளதாகவும் சபாநாயகர் தெரிவில் ஜாதிக ஹெல உறுமய ஐ.ம.சு. முன்னணிக்கு ஆதரவாக வாக்களிப்பதற்கான சூழ்நிலை பெரிதும் அருகியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

### பிரதிப்...

பற்றி பல நிபுணர்களிடம் அவர் கலந்தாலோசனை செய்துள்ளார் அத்துடன் தமது கட்சியுடனும் ஜேவிபி யுடனும் பேசியுள்ளார் எனினும் இவரை ஐ.ம.சு. முன்னணியின் தேசியப் பட்டியலில் இணைக்க வேண்டாம் எனக் கோரும் மனு ஒன்றும் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இவரும் தனது புதல்வர்கள் இருவரும் உடதலவின்ன கொலையுடன் தொடர்புபட்டு வழக்கு விசாரணைகளும் மேற்கொள்ளப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

# 35 அமைச்சுக்களுக்கான செயலாளர்கள் நியமனம்

(கொழும்பு)

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசின் புதிய அமைச்சுகளுக்கான செயலாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். இதற்கமைய 35 அமைச்சிற்கான செயலாளர்கள் புதிதாக நியமிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

பாதுகாப்பு அமைச்சின் செயலாளராக சிறில் கேரத் நியமிக்கப்பட்டுள்ளார்.

உள்துறை சட்ட அலுவல்கள் அமைச்சிற்கு நிலக் ரணதிராஜாவும்நிதி அமைச்சின் செயலாளராக டாக்டர் பி.வி.ஜயசுந்தரவும்,

கல்வி அமைச்சின் செயலாளராக டாக்டர் தாராமேலும் தகவல் தொடர்பாடல் அமைச்சின் செயலாளராக டபிள்யூ கணேகலவும் விளையாட்டு இளைஞர் விவகார அமைச்சு மற்றும் சமுர்த்தி அமைச்சின் செயலாளர்கள் முறையே ரணதுங்கவும், டிஹறபன் ஹறவாவும் நியமனம் பெற்றுள்ளனர். இதேவேளை அரச நிருவாக சிரேஷ்ட அதிகாரிகள் பலர் ஏனைய அமைச்சுக்களின் செயலாளராக நியமனம் பெற்றுள்ளனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# அரசியலமைப்புச்சபை தலைவராக சபாநாயகரே இருப்பார்

(கொழும்பு)

இன்று புதிதாக தெரிவு செய்யப்படவுள்ள சபாநாயகரே அரசியல் அமைப்புச் சபையின் தலைவராகக் கொள்ளப்படுவார் என முன்னாள் சபாநாயகர் யோசெப் மைக்கல் பெரேரா தெரிவித்துள்ளார்.

எனவே ஐக்கிய தேசியகட்சியின் சார்பில் சபாநாயகர் பதவிக்கு பரிந்துரைக்கப்பட்டுள்ள டபிள்யு. ஜே.எம். லொக்கு பண்டார சபாநாயகராக தெரிவு செய்யப்பட்டால் நாட்டின் அரசியலமைப்பு திருத்தம் மற்றும் சமாதானத்திற்கு உந்துதல் அளிக்க கூடியதாக இருக்கும் என ஜோசப் மைக்கல் பெரேரா குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் சார்பில் கம்யூனிஸ் கட்சியின் டியு குணசேகர சபாநாயகர் பதவிக்கு போட்டியிடுகிறார் என்பது குறிப்பிடத்தக்கது. (32)

### முல்லை....

பாளர் சஞ்சய அவர்கள் திறந்துவைத்தார் அடுத்து மாவட்ட நிர்வாக செயலகத்தை கிளை நடுவப் பணியகப் பொறுப்பாளர் அம்பி அவர்கள் திறந்துவைத்தார் மாவட்டமாநாட்டு மண்டபத்தை வன்னிமாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ச. கனகரத்தினம் அவர்கள் திறந்து வைத்தார்.

தொடர்ந்து மரநடுகை இடம் பெற்றது. மரநடுகை நிகழ்வுக்கு சிறப்புவிருந்தினராக கலந்து கொண்ட தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்செல்வன் அவர்களும் மற்றும் புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் செ. தயாநந்தா அவர்கள் உட்பட பலர்மரநடுகையை மேற்கொண்டனர். அடுத்து மண்டப நிகழ்வுகள் முல்லைமாவட்ட அரசியல் துறை துணைப்பொறுப்பாளர் சின்னண்ணா அவர்களின் தலைமையில் இடம் பெற்றது வரவேற்புரையை முல்லை மாவட்ட மகளிர் அரசியல் துறைப் பொறுப்பாளர் தமிழ்நிலா ஆற்றினார். வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ச.கனகரத்தினம் அவர்களின் உரையை அடுத்து சிறப்புரையை தமிழீழ அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச் செல்வன் அவர்கள் ஆற்றினார் (08)

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2004 ஆண்டு ஏப்ரில் மாதம் 22 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.